Registered as a News paper    பக்கங்கள் 10    விலை 07/=

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு    மக்கள் நாளிதழ்

Eezhanatham

நாதம் 01    திருவள்ளுவர் ஆண்டு 2035    மாசி 11    23.02.2005 புதன்கிழமை    ஓசை 256

**வேலை வாய்ப்பு**

கணனி இயக்குனர்கள்
உடன்தேவை வேதனம் 5000
ரூபாவிலிருந்து 7000 ரூபா
வரை வழங்கப்படும்
தொடர்புகளுக்கு

கிரி கொமினிக்கேசன்
இல.11 புகையிரத நிலைய வீதி
மட்டக்களப்பு தொலைபேசி 065-224715

# படையினரின் மறைமுக யுத்தத்தால்

# போர் நிறுத்தத்திற்கு பேராபத்து

## நோர்வேயிடம் விடுதலைப்புலிகள் தெரிவிப்பு!



(நமது நிருபர்)

சிறிலங்காப் படையினர் புதிதாக ஆயுதக்குழுக்களை உருவாக்கி மறைமுக யுத்தமொன்றைத் தொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் போர் நிறுத்த சூழல் தகர்த்தெறியப்படும் ஆபத்து உருவாகியுள்ளதாக தமிழீழ அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மிடம் வலியுறுத்தியுள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூன்றாண்டுகள் நிறைவானதை முன்னிட்டு நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அவர்கள் நேற்று கிளிநொச்சியில் தமிழீழ அரசியல்த் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)



கிளிநொச்சி சென்ற எரிக்சொல்ஹெய்ம் அவர்கள் விடுதலைப்புலிகளால் வரவேற்று அழைத்துச் செல்லப்படுகின்றார்.

## நள்ளிரவில் நலன்புரி நிலையத்துக்குள் புகுந்து அதிரடிப்படையினர் துன்புறுத்தல்

(நமது நிருபர்)

ஆரையம்பதி பாடசாலை அகதி முகாமில் இரவு நேரத்தில் பெண்கள், பொதுமக்கள் சிறிலங்கா அதிரடிப்படையினரால் துன்புறுத்தப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

நள்ளிரவில் நலன்புரி நிலையத்துக்குள் செல்லும் அதிரடிப் படையினர் டோச்லைட் அடித்து அவர்களை எழுப்புவதாகவும் தொல்லைப் படுத்துவதாகவும் தெரிவிக்கின்றனர்.

நள்ளிரவில் இவ்வாறு படையினர் முறைகேடாக நடந்து கொள்வது குறித்து தாம் அச்சமும் பீதியும் அடைந்துள்ளதாகவும் இவர்களை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் முகாமில் தங்கியுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை இச்சம்பவம்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## சுனாமியால் பாதிப்புற்றோருக்கு கல்முனையில் கண் சிகிச்சை முகாம்

(ரவீந்திரன்)

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு கண்சிகிச்சை முகாம் நேற்று கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

அமெரிக்கா, கலிபோர்னியா, கண்வைத்திய நிபுணர்கள் 6 பேர் கலந்து கொண்ட இவ்வைத்திய முகாமில் சுமார் 400 பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டதுடன் இலவசமாக உடனுக்குடன் மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

இந்த வைத்திய முகாமை கல்முனை நகர் லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்திருந்தது. கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் தலைவர் எம்.எம். ரகு தலைமையில் நடைபெற்ற இந்த முகாம் சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்முனைப் பிரதேசத்தில் இதுவரை காலமும் பல வைத்திய முகாம்கள் நடத்தப்பட்டாலும் கண்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

### இன்றைய நாளில்



கடற்புலி லெப்.கேணல் மதன் (யோகச்சந்திரன் ரதீஸ்குமார்) யாழ். வல்வெட்டித்துறை 13.02.1996



கடற்புலி மேஜர் வேங்கை (சூசைப்பிள்ளை செல்வக்குமார்) பொலிகண்டி யாழ். 13.02.1996

*முல்லைக் கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் பெறுமதியான ஆயுத தளபாடங்களைக் காப்பாற்றும் பொருட்டு இந்திய, இலங்கை கடற்படைகளுடன் ஏற்பட்ட மோதலின் போது வீரச்சாவடைந்தார்கள்.*

## போர் நிறுத்தம் கைச்சாத்திட்டு மூன்று வருடமாகியும் நன்மையில்லை

### தமிழ்க் கூட்டமைப்பு இன்று நாடாளுமன்றில் எதிர்ப்பு

(எம்.யுவராஜ்)

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியாகியும் இதுவரை தமிழ் மக்களுக்கு ஆளும் தரப்பால் எதுவித நன்மையும் கிடைக்கவில்லை இதனைக் கண்டித்து இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கவுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22 பேரும் பாராளுமன்ற கட்டிட முன் நுழைவாயிலிருந்து கறுப்புப் பட்டியணிந்து, அரசுக்கு எதிரான சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் ஊர்வலமாகச் செல்லவுள்ளனர்.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## புலிகளை எதிர் கொள்ள முடியாத நிலையிலேயே போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தானது

### ஜெயா எம்.பி.

(வினோக்காந்)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் போர் நிறுத்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்றாண்டுகள் நிறைவானதை முன்னிட்டு நேற்று மாலை மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் கருத்தரங்கு இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி ரவீந்திரநாத், கிழக்குப் பல்கலைக்கழக அரசியல்த்துறை விரிவுரையாளர் தில்லையன் சிவநாயகம், மற்றும் மூத்த ஊடகவியலாளரும், ஆய்வாளருமான டி.சிவராம் ஆகியோர் உரையாற்றினர்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி அவர்களின் தலைமை உரையில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன் கைச்சாத்திடப்பட்ட இந்த உடன்படிக்கை எந்த நிலையில் செய்யப்பட்டது என்பதை பார்த்தால் சிறிலங்கா அரசின் சமாதானத்தினை விடுதலைப்புலிகள் பெற்று சிறிலங்கா அரசினால் எதிர் கொள்ள முடியாத ஒருநிலையிலேயே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால் இந்த ஒப்பந்தத்தின் படி ஒரு மாதகாலத்திற்குள் தமிழ்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## போலந்து தன்னார்வ தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் மட்டு. அம்பாறை அரசியல் பொறுப்பாளருடன் சந்திப்பு

(நமது நிருபர்)

போலந்து தன்னார்வ தொண்டர் நிறுவனப் பிரதி நிதிகள் நேற்று மட்டு. அம்பாறை அரசியல்த் துறைப் பொறுப்பாளர் இளந்திரையனைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பு நேற்று பகல் கொக்கட்டிச்சோலையிலுள்ள மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இதன் பின்பு விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியிலுள்ள வைத்தியசாலைகளுக்கு சென்று அங்குள்ள குறைபாடுகளையும் இக்குழுவினர் கேட்டறிந்து கொண்டனர்.

புதுமண்டபத்தடி வைத்திய சாலைக்கு சென்ற போது பகல் நேரம் வைத்தியசாலை மூடப்பட்டிருந்தது. இது தொடர்பாக அங்குள்ள மக்களிடம் கேட்டபோது வைத்தியர் இல்லாமை தொடர்பாகவே மூடப்பட்டதாக தெரிவித்தனர்.

பின்னர் மகிழடித்தீவு வைத்தியசாலைக்குச் சென்று அங்குள்ள குறைபாடுகளையும் கேட்டறிந்து கொண்டனர்.

வைத்திய உபகரணங்களை வழங்குவதாகவும் போலநத்நாட்டு தன்னார்வ தொண்டர் நிறுவனப் பிரதி நிதிகள் தெரிவித்தனர். இதே

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

### எரிக் சொல்ஹெய்ம் சனியன்று கல்முனை விஜயம்

(நமது நிருபர்)

கொழும்பில் தங்கியிருக்கும் நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக்சொல்ஹெய்ம் எதிர்வரும் சனிக்கிழமை அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேசத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்காக இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். எதிர்வரும் வெள்ளிக்கிழமை தென்மாகாணத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தி

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## செய்தித் துளிகள்

### நிவாரணம் இல்லை

(சர்வேஸ்வரன்)

சுனாமியால் பாதிக்கப்பட்டுத் திருக்கோவில் சகலகலை அம்மன் ஆலய நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களுக்கு இரண்டு வாரகாலமாக உலர் உணவுப் பொருட்கள் எதுவும் வழங்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அம்பாறை மாவட்டத்திலுள்ள பல அரச அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு நிலைமையினை எடுத்துக் கூறியதை அடுத்து நேற்று முன்தினம் முதல் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு மந்தகதியில் நிவாரணப் பணிகள் வழங்கப்பட்டால் மக்களின் நிலை என்னவாகும் எனவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

### லண்டன் பயணம்

(காரைதீவு நிருபர்)

வவுணதீவுப் பிரதேச செயலாளர் கே.கருணாகரன் முது மாணி மேற்படிப்புக்கான புலமைப் பரிசிலை ஏற்று நேற்று முன்தினம் லண்டன் பயணமானார்.

லண்டன் மெற்றா பொலிற்றன் பல்கலைக் கழகத்தில் ஒருவருடகாலம் பயிலும் பிரதேச செயலாளர் கருணாகரன் களுதாவளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இலங்கையில் இருந்து லண்டன் செல்லும் அணியிலுள்ள ஒரேயொரு தமிழர் இவரென்று குறிப்பிடத்தக்கது.

### பொதுக் கூட்டம்

(நமது நிருபர்)

மட்.கொக்கட்டிச்சோலை இ.கி.மி. வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 25.02.2005ஆம் திகதி வெள்ளிக்கிழமை 3.30 மணிக்கு வித்தியாலயத்தின் அதிபர் திரு.எஸ்.நேசதுரை தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இப்பொதுக் கூட்டத்தின் போது புதிய நிருவாகத் தெரிவு,மற்றும் பாடசாலை அபிவிருத்தி தொடர்பாகவும் கந்துரையாடப்பட உள்ளது.

### மரநடுகை

(அ.நிஷாந்)

கடற் பேரலையினால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்களில் மீண்டும் இவ்வாறான தொரு தாக்கத்தினை தவிர்த்துக் கொள்வதற்கான வழி முறைகளாகத் தற்போது அதிகளவான மரங்கள் நடப்படுகின்றன.

இவ்வாறான வேலைத் திட்டங்களை மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் சமூக தொண்டர் அமைப்புக்கள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவற்றுள் அதிகமாகத் தென்னை மரங்களே நடப்படுவதைக் காணக்கூடியதாக உள்ள போதும் இவை கடற் பேரலையினது அதி வேகமான தாக்கத்தைச் சற்றுக் கட்டுப்படுத்தக் கூடியது என இவர்கள் தெரிவிக்கின்றனர். அது மட்டுமன்றி இது போன்ற பலவிதமான கடலோரப் பாதுகாப்புத் திட்டங்களை அரசு முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### வீதி புனரமைப்பு

(நிஷாந்)

கடற் பேரலையின் காரணமாகப் பாதிக்கப்பட்ட கடற் கரையோரப் பிரதேசங்களை அண்டியிருந்த வீதிகள் தற்போது புதிதாகத் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வேலைத் திட்டமானது கடந்த சில வாரங்களாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதுடன் இன்னும் ஒரு சிறிய காலப்பகுதியில் சுனாமியின் தாக்கத்துக்கு இலக்காகிப் புடுமோசமாகப் பாதிப்படைந்துள்ள வீதிகளும் திருத்தியமைக்கப்படும். என்றும் தற்போது வீதிகள் திருத்தும் வேலைத் திட்டங்கள் இடம் பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் மரண தண்டனை வழங்கப்பட்ட இளைஞர் விடுதலை

(நமது நிருபர்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞரொருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய மரண தண்டனையை உயர் நீதிமன்றம் ரத்து செய்ததையடுத்து அந்த இளைஞர் 15 வருடங்களின் பின்பு இன்று விடுதலையானார்.

சண்முகம் ரகுபதி என்பவரே விடுதலை செய்யப்பட்ட இளைஞராவார்.

காரைநகர் இராணுவ முகாம் மீது 1990 ஆம் ஆண்டு தாக்குதல் மேற்கொண்டதன் மூலம் 500 இராணுவ வீரர்களின் உயிரிழப்பிற்கு இவர் காரணமாக இருந்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு 2002 ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றம் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் மரண தண்டனை விதித்தது.

இந்தத் தண்டனையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் இந்த இளைஞர் மீளாய்வு மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

1990 ஆம் ஆண்டு இராணுவ முகாம் இருந்தது என்பது சட்ட மா அதிபதியினால் நிருபிக்கப்படவில்லை.

உயிரிழந்ததாகக் கூறப்படும் 500 இராணுவ வீரர்கள் தொடர்பான உறுதிப்படுத்தப்படக்கூடிய ஆவணங்கள் எதுவும் வழக்கு தொடருனரான சட்ட மா அதிபதியினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இதனையடுத்து மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்து செய்த உயர் நீதிமன்றம் குறிப்பிட்ட இளைஞரை விடுதலை செய்வதற்கான உத்தரவைப் பிறப்பித்தது.

# பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கிய பொலிஸ்கான்ஸ்டபிள் அடையாளம்

(நமது நிருபர்)

மன்னார் தாழ்வுப்பாடு கிராமத்தில் 18 வயது பாடசாலை மாணவனை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று அடையாளம் காணப்பட்டார்.

இது தொடர்பான அடையாள அணி வகுப்பு மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம்.ஐ.அப்துல்லா முன்னிலையில் நடைபெற்ற போது குறிப்பிட்ட மாணவன் பொலிஸ் கான்ஸ்டபிளை அடையாளம் காட்டினார்.

இதனையடுத்து அந்த பொலிஸ் கான்ஸ்டபிள் நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இந்த அடையாள அணி வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் நீதிமன்ற வளாகத்திற்கு சற்று வெளியே, சந்தேக நபருக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும், மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலுள்ள பொலிஸ் காவலரண்கள் அகற்றப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் ஆர்ப்பாட்டமொன்றும் நடைபெற்றது.

# இரவு நேரக் கற்கை நெறி

(நமது நிருபர்)

கடந்த இரண்டு ஆண்டுகளாகக் களுதாவளைப் பிரதேசத்தில் பல பொது இடங்களிலும் இரவு நேரக் கற்கை நிலையங்கள் இடம் பெற்று வருகின்றது.

சுனாமி அனர்த்தத்தைத் தொடர்ந்து தடைப்பட்டிருந்த களுதாவளை இலங்கேசன் இந்து மன்றத்தினரின் இரவு நேரக் கற்கை நெறிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் அனைத்து மாணவர்களும் கலந்து கொள்ளுமாறும் நிர்வாகத்தினர் வேண்டிக் கொள்கின்றனர்.

# அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகள் மாலைதீவு சென்றனர்

(நமது நிருபர்)

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட தென்கிழக்காசிய நாடுகளுக்கான விஜயத்தை தற்போது மேற்கொண்டுள்ள அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகளான ஜோர்ஜ் புஸ் மற்றும் பில் கிளின்டன் ஆகியோர் தமது சிறிலங்காவிற்கான விஜயத்தை முடித்துக்கொண்டு திங்கள் மாலை மாலைதீவு பயணமானார்கள்.

சிறிலங்கா வந்தடைந்த இவர்கள் மாத்தறை மாவட்டத்திற்குச் சென்று பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட்டனர்.

ஊடகவியலாளர் மத்தியில் கருத்து வெளியிட்ட பில் கிளின்டன்:

மக்கள் தமது வாழ்வை நிலை நிறுத்த ஒன்றிணைந்து பணியாற்றினால் தான் அரசியலில் நன்மை கிடைக்கும் என்றார்.

போர் நிறுத்த உடன்படிக்கை அமுலிலுள்ள போதிலும் பேச்சுவார்த்தை நடைபெறாமல் இருப்பது கவலைக்குரியது என்று குறிப்பிட்ட அவர், நிவாரணப் பணிகளில் அரசாங்கமும், தமிழ் மக்களும் இணைந்து பணியாற்றுவதாக ஜனாதிபதி தங்களுடன் இடம் பெற்ற சந்திப்பின் போது தெரிவித்ததாகவும் கூறினார்.

# எம்பிலிப்பிட்டிய நீதிமன்ற தாக்குதலுக்குப் பாதாள உலகக் குழுவே காரணம்

(நமது நிருபர்)

இரத்தினபுரி எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே விளக்கமறியலில் இருந்த பாதாள உலகக்குழுவைச் சேர்ந்த ஒருவரே கைக்குண்டு வீச்சை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது 30க்கும் அதிகமானோர் காயமடைந்ததுடன், மூவர் மரணமடைந்துள்ளனர். இத் தாக்குதலின் போது, நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த மேலும் 50க்கும் அதிகமான கைதிகள் தப்பிச்சென்றுள்ளனர்.

# ஜே.வி.பி.சுதந்திரக்கட்சி தொழிற் சங்க உறுப்பினர்களிடையே கைகலப்பு

(நமது நிருபர்)

சிறிலங்காவில் இடம்பெற்ற தொடர்ந்து பணிப் புறக்கணிப்பின் போது ஜே.வி.பியின் தொழிற்சங்க உறுப்பினர்களுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி தொழிற்சங்க உறுப்பினர்களுக்கும் இடையில் கைகலப்பு இடம்பெற்றுள்ளது.

2,500 ரூபா சம்பள உயர்வு கோரி மேற்கொள்ளப்பட்ட இந்த பணிப்புறக்கணிப்புக்கு ஜே.வி.பி உறுப்பினர்கள் ஆதரவளிக்காமையே இதற்கான காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

# நாங்கள் தொழிலை இழந்து அநாதரவாக உள்ளோம் அரசாங்கம் உதவ வேண்டும்

(காத்தான்குடி நிருபர்)

எங்கள் காணி நிலம் உவர் நிலமாக மாறி விட்டது. நாங்கள் மீண்டும் ஆரம்பித்து நட்ட பயிர்கள் கருகி அழிகின்றது. நாங்கள் தொழிலை இழந்து அநாதரவாக உள்ளோம். அரசாங்கம் தான் உதவவேண்டும்.

இவ்வாறு அண்மையில் களுதாவளை விபுலானந்தா மன்றத்தில் நடை பெற்ற விவசாயிக்ளின் கூட்டத்தில் தலைமை தாங்கி உரையாற்றிய பொ.இராசரெத்தினம் தமதுரையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தமதுரையில்:-

எமது எம்.பி.கனகசபை விவசாயிகள், மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாரிய அழிவை நன்கு அறிந்தவராக செயற்பட்டு நிவாரணங்களை பெற்றுத் தருவதற்காக சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

விவசாயம் மீன்பிடிக்கான அமைச்சர்கள் ஜே.வி.பி.யினராக இருப்பதில் சிக்கல் நிலை தோன்றினாலும் எமக்கான நிவாரணத்தை போராடியோ, வாதாடியோ பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் எம்.பி.முழுமையாகச் செயலாற்றி வருகின்றார்.

**- பொ.இராசரெத்தினம் -**

நிச்சயம் நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தற்போது ஓங்கியுள்ளது. ஆகவே பாதிக்கப்பட்ட மக்களாகிய நாம் பொறுமையைக் கடைப்பிடித்து எம்.பி கனகசபை எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கல்முனை மாநகர எல்லைக்குள் 7, கோடியே 40 லட்சம் ரூபா சுனாமி நிவாரணம் வழங்கல்

(றிஸ்வானுள் ஜன்னா)

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட கல்முனை மாநகர சபைப் பகுதிகளில் வாழும் 16245 குடும்பத்தவர்களுக்கு இதுவரை 7 கோடி 72 லட்சத்து 40 ஆயிரம் (77,240,000) ரூபா சுனாமி நிவாரணக் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருக்கின்றது.

கல்முனை (முஸ்லிம் பிரிவு) பிரதேச செயலகத்தில் 6552 பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்களுக்கு 3 கோடி 12 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும்,

கல்முனை (தமிழ் பிரிவு) பிரதேச செயலகத்தில் 5736 பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்களுக்கு, 1 கோடி 86 லட்சத்து 77 ஆயிரத்து 500 ரூபாவும் இவ்வாறு சுனாமி நிவாரணக் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருக்கின்றது.

ஒரு நபருள்ள குடும்பத்தவருக்கு 2500 ரூபாவும் இரண்டு நபர் அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகளையுடைய குடும்பத்தவருக்கு 5000 ரூபாவும் என வழங்கப்பட்ட இந்நிவாரணக் கொடுப்பனவுகளை மக்கள் வங்கி தற்பொழுது கொடுத்து வருகின்றது.

# சுனாமி பேரலை மீனவர்களை மட்டுமன்றி விவசாயிகளையும் பாதித்துள்ளது

## நாடாளுமன்ற உறுப்பினர் த.கனகசபை



(நமது நிருபர்)

சுனாமி மீனவர்களோடு சேர்த்து விவசாயிகளின் வயிற்றிலும் அடித்து விட்டது. அதனால் கரையோரப் பகுதிகளில் விவசாயம் செய்த அனைவரும் தாங்கள் சுய தொழிலை இழந்துள்ளனர்.

இவ்வாறு அண்மையில் களுதாவளை விபுலானந்தா மன்றத்தில் நடைபெற்ற களுதாவளை விவசாயிகளுக்கான கலந்துரையாடலின் போது மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கனகசபை தெரிவித்தார்.

பொ. இராசரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தொடர்ந்து உரையாற்றிய கனகசபை எம்.பி விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவுகளை நன்கு அறிவேன். இது சம்பந்தமாக சகல தரப்புக்களிடம் தெரிவித்துள்ளேன். அரச அதிபர் தொடக்கம் சகல அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளேன். எனவே இது சம்பந்தமான விடயத்தில் அக்கறையாகவேயுள்ளேன். விவசாயம் மீன்பிடி சம்பந்தமான அமைச்சர்கள் தமிழ் மக்களின் விரோதமான ஜே.வி.பி கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆகையால் நாம் நமது உரிமையை வாதாடியும் போராடியுமே பெறவேண்டி உள்ளதென தெரிவத்தார்.

விவசாயிகளின் அவலங்களை சகல தரப்பினருக்கும் தெரிவிக்க வேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. நூற்றுக் கதிகமான விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# தொண்டர் ஆசிரியர் சங்க விசேட கலந்துரையாடல்

(ஜெஸ்மி எம்.மூஸா)

அம்பாறை மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் விசேட கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு தலைவர் எஸ்.எஸ் றுக்மங்கரன் தலைமையில் வீரத்திடல் அல்ஹிதாயா மகா வித்தியாலயத்தில்நடை பெற்றது.

மார்ச் மாதம் தருவதாக உறுதியளிக்கப்பட்டுள்ள நியமனங்களை குறித்த காலத்திற்குள் வழங்குவதற்கான அழுத்தங்களை அரசுக்கு வழங்கல்,தொண்டர் ஆசிரியர்களுக்கான இந்நியமனங்களில் அநீதிகள் ஏற்படாமல் தடுப்பதற்கான வழிவகைகளைச்செய்தல், நாவிதன் வெளிப் பிரதேசம் கஷ்ரப் பிரதேசமாக உள்ளதுடன் இப்பகுதியில் அதிகமான தொண்டர் ஆசிரியர்களும் உள்ளனர்.

எனவே இவர்களின் நியமனங்களை மேற்கொள்ளல் விரைவுபடுத்தும் நடவடிக்கைகளை தங்களுடன் இணைத்து இந்நியமன விடயத்தில் செயற்பட தமிழர் ஆசிரிய சங்கத்தையும் அழைத்தல், உள்ளிட்ட தீர்மானங்கள் கலந்து ரையாடலின் போது எடுக்கப்பட்டுள்ளன.இக்கலந்துரையாடலின் போது நாவிதன் வெளிப்பிரதேசத்திற்கான தனியானதொரு சங்கமும் நிறுவப்பட்டன

# ஏழுகட்டளைச் சட்டங்களின் திருத்தப்பணிகள் நாடாளுமன்றில்

(நமது நிருபர்)

பிறப்பு, இறப்பு,சிறுவர் பராமரிப்பு, நிவாரணம் தொடர்பான 7 கட்டளைச் சட்டங்களின் திருத்தப் பிரேரணைகள் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளன.

சுனாமி அனர்த்தத்தை தொடர்ந்து விசேட ஏற்பாடுகள் மூலம் இந்தக் கட்டளைச் சட்டங்களைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாக நீதி மற்றும் அரசியல் யாப்பு விவகார அமைச்சர் ஜோன் செனவிரெட்ண தெரிவித்திருக்கின்றார்.

தற்போதைய விதிகளின் படி காணாமல் போனவர்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ள ஒரு வருடம் காத்திருக்க வேண்டியிருக்கும் இந்தக் கால எல்லை ஒரு மாதகாலமாகக் குறைக்கப்படவிருக்கின்றது. இது போன்று சிறுவர்களைப் பராமரிக்கும் தனிநபர்களும், நிறுவனங்களும் தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தர்.

# திருக்கோவில் முதலாம் பிரிவில் அரச நிவாரணம் இல்லை

(சர்வேஸ்வரன்)

சுனாமி அனர்த்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட 5000 ரூபா கொடுப்பனவு திருக்கோவில் பிரதேச முதலாம் பிரிவுக்கு இதுவரை வழங்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் அம்பாறை மாவட்டத்தில் அநேக இடங்களில் இப்பணம் வழங்கப்பட்டுள்ள போதிலும் சுனாமி அனர்த்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதியான திருக்கோவில் முதலாம் பிரிவுக்கு வழங்கப்படாதது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது அத்துடன் இம் மக்களுக்கு நிவாரணப்பொருட்கள் கூட சரியான முறையில் வழங்கப்படவில்லை எனவும் கவலை தெரிவிகின்றனர்.

# மருதமுனையில் ஏற்பாடுசெய்த மக்கள் போராட்டம் கைவிடப்பட்டது

(ஜெஸ்மி. எம்.மூஸா)

அரசினால் தீர்மானிக்கப்பட்டுள்ள கரையோரப் பாதுகாப்பு வலயத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துச் சென்ற வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகையை அடுத்து மருதமுனையில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் திடீரெனக் கைவிடப்பட்டது.

சுனாமியின் பெயரால் வாழ்வுரிமையைப் பறிக்காதே!, பாலங்களை உடனடியாகப் பாதைகளைச் சீர்செய்!, வீடிழந்த எமக்கு முதலில் வாழ்விடம் கொடு!, எங்கள் நிலம் எமக்கு வேண்டும்!, எங்கள் கடல்வளம் எமக்குத் தேவை!, எனப்பல சுலோகங்கள் எழுதப்பட்டு ஏற்கனவே மக்களுக்குக் கொடுத்த அறிவுறுத்தலின் படி மக்களும் கூட திடீரென பதாதைகளை எடுத்துக் கொண்டு சென்று விட்டார்கள்.

பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் முஸ்லிம் மக்கள் செயலணியால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அரசியல் தலையீடுகளை அடுத்தே கைவிடப்பட்டதாகவும் மருதமுனை ஏற்பாட்டாளர்களுக்கு விடுக்கப்பட்ட தொலைபேசி அழைப்புக்களை அடுத்தே இம்முடியு எடுக்கப்பட்டதாகும்.

ஏற்பாட்டு அமைப்பின் மருதமுனைப் பொறுப்பாளர்களுள் ஒருவரான மௌலவி எம்.ஐ.எம் மஸுன் தெரிவித்தார்.

சுனாமியை விட இவ்வரசியல் சுனாமி பெரிதாகத்தான் உள்ளது என கூடியிருந்த விடயம் அறிந்த கிராமவாசி ஒருவர் கருத்து வெளியிட்டுச் சென்றார். ஏனைய கரையோரப்பகுதிகளில் இவ்வார்ப்பாட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வீடுகள் அமைப்பதற்கு கட்டுமாணப் பொருட்கள் வழங்கல்

(ஜெஸ்மி. எம்.மூஸா)

சுனாமிப் பேரலையால் வீடுகளை முற்றாக இழந்து நலன்புரி நிலையங்களில் உள்ள மருதமுனையைச் சேர்ந்த 75 பேருக்கு தகரவீடுகளை அமைப்பதற்கான கட்டுமாணப்பொருட்களை வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை(19.02.2005) மருதமுனை சுனாமி அனர்த்த புனர் நிர்மாண அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

'சேஆ' நிறுவனத்தால் வழங்கப்பட்ட இப்பொருட்களை கையளிக்கும் நிகழ்விற்கு கல்முனைப் பிரதேச செயலாளர் ஏ.எச்.எம் அன்ஸார் பிரதம அதிதியாகக் கலந்த கொண்டு கருத்துரை வழங்கியதுடன் அமைப்பின் தலைவர் எம்.ஹில்மி, செயலாளர் எம்.எச்.எம். நைறூஸ் உட்பட நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

# நவீன வீடமைப்புத் திட்டத்திற்கான மதிப்பீடுகள் தயார் மக்கள் ஒத்துழைத்தால் ஆரம்பிக்க முடியும்

## -அமைச்சர் பேரியல் அஷ்ரஃப்-

(வி.ரி சகாதேவராஜா)

"சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நவீன வீடமைப்புத் திட்டத்திற்கான மதிப்பீடு மற்றும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தயார் நிலையிலுள்ளன. மக்கள் ஒத்துழைப்புத் தந்தால் இன்றும் அத் திட்டத்தை ஆரம்பிக்கத் தயாராகவுள்ளேன் "

இவ்வாறு வீடமைப்பு கிழக்கு நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரஃப் கூறியுள்ளார்.

சிலர் ஜனாதிபதியைப்பற்றி அவதூறாகப் 'பேசி வருகின்றனர். தெற்கைப் பார்ப்பது போன்று கிழக்கைப் பார்ப்பதில்லை பாரபட்சம் காட்டுகின்றார் எனக் கூறுகின்றார்கள் உண்மையில் ஜனாதிபதி எந்தப் பாரபட்சமும் காட்டவில்லை.

அவரது மேற்பார்வையிலேயே வீடமைப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இன்றும் ஆரம்பிக்கத்தயார்

இப்பிரதேசத்திலேயே வீடமைப்புக்குரிய பொருத்தமான காணி இல்லாமையே அடிப்படைக் காரணமாகும். பாடசாலைகளில் மாணவருக்குப் பதிலாக மக்கள்குடியேறியுள்ளமையால் பாடசாலையை சரிவர ஆரம்பிக்க முடியாமல் போய்விட்டது.

காணிதொடர்பான பிரச்சினைக்கு தீர்வுகாண மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் உடனடியாக இப்புதிய வீடமைப் புத்திட்டத்தினை அமுலாக்க முடியும் இவ்வாறு அவர் கூறினார்.

# வில்லுவெட்டையில் யானை தாக்கி ஒருவர் பலி

(ஜெஸ்மி எம்.மூஸா)

சம்மாந்துறையைச் சேர்ந்த அகமட்லெப்பை தம்பி(48) என்பவர் வளத்தாப்பிட்டி வில்லுவெட்டையில் வைத்து யானை அடித்து பரிதாபகரமாக மரணமடைந்த சம்பவமொன்று கடந்த் சனிக்கிழமை நிகழ்ந்திருக்கின்றது.

பஸார் வீதியில் வசிக்கும் குறித்த நபர்வளத்தாப்பிட்டி வில்லுவெட்டையில் வேளாண்மை செய்து வருபவர் சூடு அடிக்கும் காலமாகையால் சில வாரங்களாக வயல் காவலுக்குச் சென்று வந்துள்ளார் சம்பவதினமன்றும் முகமட்தம்பி வயல் காவலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அதிகாலை 3மணியளவில் யானை தாக்கியதாகவும்,உடனடியாக அம்பாறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டும் காப்பாற்ற முடியாமல் போய் விட்ட தென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மக்களின் எதிர்கால வளர்ச்சிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவி

(நமது நிருபர்)

சுனாமிப் பேரலையினால் உயிர்களையும் உறவுகளையும் உடமைகளையும் இழந்து துன்ப துயரத்திற்கு தள்ளப்பட்ட மக்களின் எதிர்கால வளர்ச்சிக்காக இன்று உழைக்கும் கரங்களாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முன்னிலையில் உள்ளது.

வாழ்வில் ஒவ்வொரு மனிதனும் சுபிட்சமாகவும் , சுதந்திரமாகவும் தங்கு நிலையற்ற வாழ்வையே வாழவிரும்புகின்றனர்.

அந்த வகையில் இன்று எம் கரையோர மக்களுக்கு ஏற்பட்ட பெரும் துன்ப நிலையில் பங்கேற்று இன்று உதவிக்கரங்களாக சுனாமியால் பாதிக்கப்பட்ட பூநொச்சிமுனை முஸ்லிம் பிரதேசத்தில் மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்து வரும் தற்காலிக கொட்டகைகளை சுவிஸ் நாட்டு தமிழர் புனர் வாழ்வுக்கழக உறுப்பினர்கள் 17 பேர் கொண்ட குழுவும் அதனோடு 3 தமிழர்களும் இரவுபகலின்றி வியர்வை நீர் நிலத்தில் சிந்த சொந்த செலவில் இங்கு தங்கி நின்று இங்கு வாழும் மக்களுக்காக உதவிக்கரங்களாக வேலை செய்து கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு தூரநோக்கோடு பணியினை சேவையாற்றி வரும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உலகில் தமிழர் வாழும் தாய் மண்ணின் உறவுகளுக்கு கைகொடுத்துப் பணி செய்யும் சுவிஸ் தமிழ் மக்களினதும், சுவிஸ் நாட்டுப் பிரஜைகளினதும் உதவிக்கரங்கள் என்றும் நிலைத்திருக்க வேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மடத்தின் பெயரால் யாரிடமும் பணம் வசூலிக்கவில்லை

## எச்சரிக்கையாக இருக்குமாறு வேண்டுகோள்

(வி.ரி.சகாதேவராசா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் நிருமாணிக்கப் பட்டுவரும் மடத்தின் பெயரால் நாம் யாரிடமும் பணம் வசூலிக்கவில்லை இது விடயத்தில் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறு வேண்டுகின்றோம்.

இவ்வாறு ஆலயபரிபாலன சபைத்தலைவரும் பிரதிக் கல்விப்பணிப்பாளருமான கே.பாஸ்கரன் அறிவித்துள்ளார்.

கடந்த வாரம் இம்மட நிருமாணிப்புக்கென மட்டுநகர்ப் பகுதியில் ஒரு கும்பல் றிசீட் புத்தகம் சகிதம் நிதிசேகரிக்கப்பட்டதாக பரவலாக தமக்கும் புகார் வந்ததையடுத்து மேற்படி அறிவித்தலை விடுப்பதாக அவர் தெரிவித்தார். ஆலய நிருவாகம் தமது நிருவாகத்திலிருந்து வரும் வருவாயிலிருந்து இம்மடத்தைக் கட்டி வருவதாகவும் அதற்காக ஆலய நிருவாகம் சார்பாக யாரும் யாரிடமும் பணம் வசூலிக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

பிரஸ்தாப மட நிருமாணிப்புக்கென பணம் சேகரிக்க யாராவது வந்தால் யாரும் பணம் கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதோடு , அப்போலி ஆசாமிகளை முடிந்தால் பொலிஸில் ஒப்படைக்க தகவல் கொடுக்குமாறும் வேண்டுகின்றோம் என்று கூறினார்.

# மாலை நேர பாடசாலை நடாத்துவதால் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

## -கல்முனை பகுதி அதிபர்கள் புகார்.-

(றிஸ்வானுல் ஜன்னா)

சுனாமி பேரலையின் பின்னர் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை பாதிப்புறாத பாடசாலைகளில் மாலை நேர பாடசாலைகளாக இயங்க வைப்பதில் நிர்வாக ரீதியான பல்வேறு சிக்கல்களையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்க வேண்டி இருப்பதாக கல்முனைப் பிரதேசத்திலுள்ள பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் புகார் தெரிவித்திருப்பதுடன் இத்திட்டம் வெற்றியளிக்காதிருப்பதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்படாத பாடசாலைகள் காலை 8 மணி தொடக்கம், நண்பகல் 12மணி வரையும், பாதிக்கப்பட்ட பாடசாலைகள் பிற்பகல் 1மணி தொடக்கம் 4 மணி வரையும் ஒரு பாடசாலை வளாகத்தினுள் நடாத்தப்படுகின்றன.

இதன் காரணமாக ஒரு பாடசாலை தானும் முழுமையாக நடாத்தப்படக் கூடியதாக இல்லை என இவர்கள் குறை தெரிவிக்கின்றனர். விசேடமாக இவ்வாண்டு க.பொ.த (உயர்தரம்), க.பொ.த (சாதாரண தரம்) 5ம் தர புலமைப் பரிசில் ஆகிய பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்குத் தேவையான மேலதிக வகுப்புக்களை நடாத்துவது மிக கஷ்டமான நிலையை இப்பாடசாலைகள் எதிர்நோக்குவதாக அதிபர்கள் கவலையுடன் கூறுகின்றனர். ஒரு பாடசாலை வளவினுள் இரு பாடசாலைகளை இயங்க வைப்பது என்ற முடிவில் கல்வித் திணைக்கள அதிகாரிகள் விடாப்பிடியாக தொடர்ந்திருந்து வந்தால் கல்முனைப் பிரதேசத்தில் எந்தப் பாடசாலையும் முழுமையாக இயங்க முடியாத நிலை ஏற்பட்டு கல்வி வளர்ச்சியில் இப்பிரதேசம் மிக மோசமான வீழ்ச்சியை எதிர்நோக்குவதுடன் மாணவர்களின் நகத்தை உள ரீதியான தாக்கம் என்பனவற்றிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி விடும் என கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டி அச்சமூட்டுகின்றனர். கல்முனைப் பிரதேசத்தில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் பெற்றோர், ஆசிரியர்கள், மற்றும் பாடசாலை நலன்விரும்பிகள் என்போர்களை உள்ளடக்கியதாக தனியான சந்திப்பொன்றை கல்வித் திணைக்கள அதிகாரிகளால் இதுவரை ஏற்படுத்தி அவர்களின் கருத்துக்கள், ஆலோசனைகள் எதையும் பெறவில்லை என்ற ஆதங்கமும் பெற்றோர்கள் மத்தியில் இருந்து கொண்டிருக்கின்றது.

# யூத் அசம்பிளியின் ஏற்பாட்டில் உடுதுணிகள் அன்பளிப்பு.

(மருதமுனை நிருபர்)

அட்டாளைச்சேனை யூத் அசம்பிளியின் ஏற்பாட்டில் ஆழிப் பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மருதமுனைப் பிரதேசத்திலுள்ள குடும்பங்களுக்கு பெருந்தொகையான உடுப்பு வகைகள் 20ம் திகதி வழங்கியது.

மருதமுனை முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவின் தலைவர் எப்.எம்.அமீருள் அன்சார் மௌலானாவுடன் யூத் அசம்பிளியின் டாக்டர் கே.எல்.எம். நக்பர் வழங்கினார். பாதிக்கப்பட்ட குழுக்களுக்கு மு.கா. மத்திய குழுவின் தலைவர் அன்சர் மௌலானா பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு துணிவகைகளை ஒழுங்காக வழங்கினார்.

யூத் அசம்பிளி அமைப்பு அம்பாறை மாவட்டத்திலுள்ள பல முஸ்லிம் கிராமங்களுக்கும் பலதரப்பட்ட உதவிகளைச் செய்து வருவதாக அசம்பிளியின் தலைவர் கே.எல்.எம்.நக்பர் தெரிவித்தார்.

# குழந்தைகளை தத்தெடுக்க புதிய சட்டத் திருத்தம்.

(நமது நிருபர்)

சுனாமி அனர்த்தத்தினால் பெற்றோரை இழந்துள்ள சிறுவர்களைத் தத்தெடுப்பதற்கு சிறிலங்கா அரசுபுதிய சட்ட திருத்தம் கொண்டு வரவுள்ளது. இதன்படி குழந்தை ஒன்றைத் தத்தெடுக்க விரும்புகின்றவர்கள் அதற்கான விண்ணப்பத்தை அவர்கள் வசிக்கும் பிரதேசத்தைச் சேர்ந்த நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்து அதன் பிரதியை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று நீதியமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்துள்ளார். விசேட குழுவொன்றின் மூலம் இந்த விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு தத்தெடுக்க விண்ணப்பித்தோர்கள் அதற்கான தகுதி உடையவர்களா என்று பரிசீலிக்கப்படும்.

# ஊடகவியலாளர் பணியில் படையினர் தலையீடு

## -ஊடகவியலாளர்கள் கண்டனம்.-

(நமது நிருபர்)

வவுனியாவிலும், திருகோணமலையிலும் ஊடகவியலாளரின் பணிகளில் தடைகள் ஏற்பட்டமை குறித்து சுதந்திர ஊடகமையம் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

அக்கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது வவுனியாவில் படையினர் திடீர் நோயுற்ற சம்பவத்தின் போது இடம் பெற்றதாகக் கூறும் நிகழ்வு தொடர்பில் வன்னிப் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடகத்தினர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோருக்கும் முறைப்பாடு செய்துள்ளனர். கடந்த சனிக்கிழமை இராணுவச் சிப்பாய்கள் வவுனியா பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளையில் அங்கு செய்தி சேகரிப்பதற்காகச் சென்ற ஊடகவியலாளர்களை இராணுவ அதிகாரிகள் எச்சரித்தமையும், மற்றும் அவர்களை அச்சுறுத்தியமையும் வன்னிப் பத்திரிகையாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் அடுத்த ஆண்டு இயற்கை அனர்த்தம் அதிகளவில் இடம்பெறும்.

## வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு.

(நமது நிருபர்)

எதிர்வரும் காலங்களில் பொதுவாக 2006ம் ஆண்டில் இலங்கையில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்

வங்காள விரிகுடாவில் வெப்பநிலை அதிகரித்து வருவதால் இந்த நிலை ஏற்படும் எனக் குறிப்பிட்டார். இதன் காரணமாக மண்சரிவு 40 வீதம் அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது.

இவ்வியற்கை அனர்த்தம் மலையகப் பகுதிகளிலேயே இடம் பெறும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கடலின் மட்டம் தற்போதய நிலையைக் காட்டிலும் 0.8 வீதத்தால் உயரவுள்ளது. அதே நேரம் சூறாவளி மற்றும் வெள்ளம் ஆகிய இயற்கை அனர்த்தங்களும் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் உள்ளன. நச்சு வாயுக்கள் வளிமண்டலத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கமே இதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நச்சு வாயுக்கள் வளிமண்டலத்தில் கலக்கும் வாய்ப்புக்களை கட்டுப்படுத்துவதே இயற்கை அனர்த்தங்களை கட்டுப்படுத்தக்கூடிய தன்மையைக் கொண்டு வருமென்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# பௌத்த குருமாரின் சிரமதானப் பணி இன நல்லுறவுக்கு எடுத்துக்காட்டாகும்.

## -பாதிக்கப்பட்ட மக்கள் கருத்து.-

(மருதமுனை நிருபர்)

ஆழிப் பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் இன மதவேறுபாடின்றி தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் சிங்கள, பௌத்த மதகுருமார் சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருகின்றமை இனநல்லுறவுக்கு எடுத்துக்காட்டான செயற்பாடாகும் என பாதிக்கப்பட்ட மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெரிய நீலாவணை, அக்பர் கிராமம், பாண்டிருப்பு, மருதமுனை, கல்முனைக்குடி, கல்முனை, இஸ்லாமாபாத், சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர் பிரதேசங்களில் பௌத்த மதகுருமார் உட்பட சிங்கள சகோதரர்கள் பெருந்தொகையானோர் ஈடுபட்டுள்ளனர். மேலும் பேராதனை, ராஜரட்ட மற்றும் ஏனைய சில பல்கலைக்கழக மாணவர்களும் இந்தச் சிரமதானப்பணிகளில் ஈடுபட்டனர்.

# போர்ச் சூழலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்டஈட்டு விண்ணப்ப திகதி நீடிப்பு

(றிஸ்வானுல் ஜன்னா)

1981ம் ஆண்டு தொடக்கம் 1984ம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமான பாதிக்கப்பட்டோருக்கு ஜனாதிபதியின் ஆணைக் குழுவின் பரிந்துரைக்கமைய நஸ்டஈடு கோருவ தற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான திகதி எதிர்வரும் 28ம் திகதி வரை நீடிக்கப்பட்டி ருக்கின்றது.

நிவாரணம், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு இது தொடர்பான அறிவித்தலை பாதிக்கப்பட்டோருக்குத் தெரிவித்துள்ளது. சுனாமிப் பேரலை காரண்மாகப் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு, தெற்கு ஆகிய பிரதேசங்களில் இன வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் வாழ்ந்து வருவதால் அவர்களும் விண்ணப்பிப்பதற்கு வசதியாகவே இக்கால நீடிப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

வன்செயல் நிவாரணங்களுக்கு விண்ணப்பிப்போரின் இது தொடர்பான ஆவணங்கள் சுனாமிப் பேரலை காரணமாக தொலைந்திருப்பின் அல்லது சேதமடைந்திருப்பின் அது தொடர்பாக பிரதேச செயலாளரின் விதப்புரையுடன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

# அரச சேவையில் கடமையாற்றும் பெண் ஊழியர்களுக்கு பிரசவ விடுமுறை சுற்றறிக்கை.

(யூ.எல்.எம். பைஸர்)

அரச சேவையில் கடமையாற்றுகின்ற பெண் உத்தியோகத்தர்களுக்கான பிரசவ விடுமுறை தொடர்பான புதிய சுற்று நிருபம் சகல அமைச்சின் செயலாளர்கள் மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொது நிருவாக சுற்றறிக்கை 4.2005 உம், ஆ/7/5/1/100 இலக்கம் கொண்டதுமான புதிய சுற்றறிக்கை பொது நிருவாக அமைச்சின் செயலாளர் டி.திஸாநாயக்கவினால் 01.01.2005ல் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தாபனக் கோவையின் 18ம் பிரிவின் XII ம் அத்தியாயத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அரச சேவையிலுள்ள நிரந்தர, தற்காலிக பயிற்சி பெறுகின்ற பெண் ஊழியர்கள் இதற்கு உரித்துடையவர். பெண் ஊழியர்களுக்கு ஒவ்வொரு உயிருடனுள்ள குழந்தைகளினைப் பிரசவிப்பதற்காக 84 வேலை நாட்கள் முழுச்சம்பள விடுமுறையாக வழங்கப்படும். குழந்தை பிறந்து 4 வாரங்களுக்கு முன்னர் அவர்கள் கடமைக்குத்திரும்ப அனுமதிக்கப்படமாட்டார்கள். பிரசவ விடுமுறை பெறுவதற்கு வைத்திய அத்தாட்சிப் பத்திரம் அல்லது பிள்ளையின் பிறப்புப் பதிவு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த விடுமுறையை கணிப்பிடும் போது பொது விடுமுறைகள் சனி, மற்றும் ஞாயிறு தினங்கள் உட்படுத்தப்படமாட்டாது.

குழந்தையைப் பராமரிக்க மேலும் வீடுமுறை தேவைப்படுமிடத்து மேலும் 84 நாட்கள் அரைச் சம்பள விடுமுறையாக வழங்கப்படும் அரைச் சம்பள விடுமுறைக் கணிப்பீடு செய்யும் போது அதனுள் வருகின்ற பொது விடுமுறைகள், சனி மற்றும் ஞாயிறு தினங்கள் அரைச் சம்பள விடுமுறைகளாகக் கணிக்கப்படும்.

இதே வேளை மேற் குறிப்பிட்ட விடுமுறை நாட்களும் குழந்தையைப் பராமரிக்கப் போதுமானதான் இல்லாதவிடத்து மாத்திரம் மேலும் 84 நாட்கள் சம்பளமற்ற விடுமுறையாக வழங்கப்படும். இவ் விடுமுறை கணிப்பீடு செய்யப்படும் போதும் அதனுள் வருகின்ற பொது விடுமுறைகள் சனி மற்றும் ஞாயிறு தினங்கள் என்பனவும் சம்பளமற்ற விடுமுறை நாட்களாகக் கணிககப்படும். திணைக்களத் தலைவர்கள் சம்பளமற்ற விடுமுறையை வழங்குகின்ற போது உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்ற சம்பள முற்பண மற்றும் கடன்களை அறவிடக் கூடியதாக உள்ளதா என திருப்திப்படுமிடத்து மாத்திரமே சம்பளமற்ற விடுமுறையை வழங்க முடியும்.

பிரசவ விடுமுறை முடிந்து உத்தியோகத்தர் கடமைக்குத் திரும்பிய காலப்பகுதியில் குழந்தைக்கு பாலூட்டுவதற்காக சாதாரண கடமை நேரத்தை விட ஒரு மணி நேரம் முன்பதாக அலுவலகத்தில் இருந்து செல்ல அனுமதிக்கப்படுவர். இது குழந்தைக்கு 6 மாதம் பூர்த்தியாகும் வரை மாத்திரமே செல்லுபடியாகும்.

மேலும் கர்ப்பமுற்று 5 மாத காலத்தின் பின்னர் கடமை நேரத்தை விட அரைமணி நேரம் பிந்தி கடமைக்கு சமூகம் தரவும் கடமை நேரத்தை விட அரை மணி நேரம் முன்னதாக அலுவலகத்தில் இருந்து செல்லவும் அனுமதிக்கப்படும். இது பிரசவ விடுமுறை பெறும் வரை வழங்கப்படும். எவ்வாறாயினும் இச் சுற்று நிருபம் நடைமுறைக்கு வரும் முன்னர் தங்களது 84 வேலை நாட்கள் விடுமுறை பூர்த்தியான உத்தியோகத்தர்களுக்கு புதிய சுற்றுநிருபம் பொருந்தாது.அவர்களுக்கு 03/2004 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையே நடைமுறையிலிருக்கும் என மேலும் அச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை ஆரம்பம்.


(றிஸ்வானுல் ஜன்னா)

சுனாமிப் பேரலை காரணமாக தேசிய அடையாள அட்டைகளை இழந்தவர்களுக்கு அதற்குப் பதிலாக புதிய அடையாள அட்டைகள் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தில் "ஆட்பதிவுத் திணைக்கள நடமாடும் சேவை" எதிர்வரும் மார்ச் மாதம் 12,13ம் திகதி ஆகிய இரு தினங்களில் நடாத்தப்படும் என ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் இரு நடமாடும் சேவை கல்முனை அக்கரைப்பற்று ஆகிய பிரதேச செயலகங்களில் நடாத்தத் திட்டமிடப்பட்டிருக்கின்றது.


கல்முனை, சாய்ந்த மருது, காரைதீவு, நிந்தவூர், ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் கல்முனைப் பிரதேச செயலகத்திலே சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும். இது போன்று பொத்துவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மனித உயிர் இயக்கத்திற்கு மிக இன்றியமையாத உறுப்பாகத் திகழ்வது இதயமாகும்




எமது உடலில் குருதியினை பல்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதில் இதயம் முக்கி இடம் வகிக்கின்றது. எமது தசைகளுக்கு தொடர்ச்சியாக சக்தியும் ஊட்டச்சத்தும் வழங்கும் நடவடி க்கையினை இதயம் மேற்கொள்கின்றது.

**கேள்வி: இதய நோய்களின் வகைகள் என்னென்ன?**



**பதில்:**

Congenitai பிறப்பிலே தோன்றுபவை.

Rhematic, வாத நோய் காரணமாகத் தோன்றுபவை.

SeXuallytrans, mitted, பாலியல் நோய் காரணமாக தோன்றுபவை.

Inbectlous, கிருமி தொற்றால் ஏற்படுபவை.

Ischaemic Hexrtdisease, இதயத் தசை இரத்த நாளத்தோடு தொடர்பு.

Lung Diseases, நுரையீரல் நோய்களோடு தொடர்புடையவை.

Unknown couses,புரியாத காரணங்களால் தோன்றுபவை.

miscellaneous, பொதுவானவை.

இதய நோய்களின் அறிகுறிகள் எவை.

- நெஞ்சில் ஏற்படும் வலி.
- மேல் மூச்சு வாங்குதல்.
- களைப்பு.
- உடலெங்கும் நீலம் பாய்தல்.
- மயக்கம்.
- மார்பு படபடப்பு
- இருமும் போது இரத்தம் வருதல்.
- நெஞ்சில் கோழை கட்டுதல்.
- தூக்கமின்மை.

**கேள்வி: இதயத்தில் தோன்றும் வலிக்குக் காரணம் என்ன?**

**பதில்:** இதய நோய் காரணமாக ஏற்படும் வலி இதயத்தின் தசைகளுக்கு இதயம் இரத்தப் பங்கீடு செய்யும் போது இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படுவதால் ஏற்படுகின்றது.

இரத்த நாளங்களில் ஏற்படும் அடைப்பின் காரணமாக இதயத் தசைகளுக்கு தேவையான இரத்தம் கிடைக்காத காரணத்தால் இரத்தப் பங்கீடுகுறைவடைவதன் காரணமாக இதயத் தசைக்கு பிரான வாயு குறைவு ஏற்படுவதால் ஏற்படும் ஊன்மச் சிதைவு காரணமாக உயிர் பொருள் அல்லது மாறுபட்ட பொருள்கள் meta bolithis தோற்றுவிக்கின்ற உணர்ச்சி தூண்டுதல்கள் காரணமாகவே இதய நோயில் நெஞ்சு வலி ஏற்படுகின்றது.

அதிக தேவையை முன்னிட்டு இதயத்தின் தசைக்கு பிரான வாயு பங்கீடு குறையும் போது இதயம் அதிக வேலையைச் செய்யத் தூண்டுகிறது. இத்தகைய சூழலில் இதயத் தசையில் இடைக்காலக் கழிவுப் பொருட்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன. இவை காரணமாகவும், இதயத் தசையில் வலி சில சமயங்களில் தோன்றுகின்றது.

**கேள்வி: மாரடைப்பு நோய் என்றால் என்ன?**

**பதில்:** மனித உயிர் இதயத்திற்கு மிக இன்றியமையாத உறுப்பாக நிகழ்வது இதயமாகும். இந்த இதயம் வலுமிக்க தசைகளால் ஆனது. இந்த இதயத்தின் தசைகள் உயிர் வாழ்வின் ஒவ்வொரு கணமும் சுருங்கி விரிந்து செயல்படுகின்றது. இதயத்தின் உள்ளேயுள்ள இதயத்தை உடலின் எல்லாப் பகுதிக்கும் சீராகச் செலுத்துகின்றது. இது ஒரு கணம் செயல்படவில்லை என்றால் மனிதன் உயிர் வாழ முடியாது. இவ்வாறு இதயம் செயற்படும்படி உறுதுணைபுரியும் இதயத்தின் தசைகள் உயிர்வாழ அவற்றிற்கும் சத்தூட்டம் தேவை. இவற்றை இதயத்தின் தசைக்கு அளிப்பதற்கென்றே தனியான இரத்த நாளங்கள் இருக்கின்றன. இத்தகையக் குருதி நாளங்களில் சில நேரங்களில் உறைந்து விடுகின்றன. இரத்தம் செல்வது தடைப்பட்டுவிடுகின்றன. இதனால் இதயத்தின் தசைகள் இறக்கும் நிலை ஏற்படுகின்றது. இதனால் இதயம் இயங்க முடியாத நிலை ஏற்படுகின்றது. உயிர் இயக்கத்தின் தலைமை நிலையமான இதயமே செயற்படாது நின்று விடுவதால் உயிரே சில விநாடிகளில் பிரிந்து விடுகின்றது. இதனையே நாம் மாரடைப்பு நோய் என்று அழைக்கின்றோம்.

**கேள்வி: இதயத்தின் இரத்த ஓட்டம் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன?**

**பதில்:** இதயத்தின் முக்கிய வேலை இரத்தத்தை உடலின் பல்வேறு பாகங்களுக்கும் உந்தி செலுத்துவதாகும். இரத்தக் குழாய்களின் வழியாக இரத்தம் உந்தி செலுத்தப்பட்டு அதன் காரணமாக இரத்த ஓட்டம் ஏற்பட்டு, உடலின் பல்வேறு பாகங்களுக்கும் சென்ற இரத்தம் மீண்டும் இதயத்தையே வந்தடையும். மீண்டும் இதயத்திலிருந்து பல்வேறு பாகங்களுக்கும் செலுத்தப்பட்டு இவ்வாறான நிகழ்வு தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும் இவ்வாறாக இதயம் தொடர்ந்து சுருங்கி விரிவதால் இதயத்தின் தசைகளுக்கு தொடர்ச்சியாக சத்தியும் ஊட்டச்சத்தும் வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. இவைகள் இரத்தத்தின் மூலமாக பிராணவாயு வாயிலாக இதயத்தின் தசைகளுக்கும் பிரத்தியேகமான வலைபோன்று பின்னப்பட்ட, இரத்த நாளங்களுக்கு இதயத் தசை நாளங்கள் என்று பேர். இதயத்தசை இரத்த நாளங்கள் இரண்டாகும். இவை இதயத்தின் மேல் தசை மூலமாக கிளைவிட்டுச் சென்ற பின்னர் இதயத் தசையை ஊடுருவிச் செல்கின்றன.இதயம் தனக்கு தேவையான அளவுக்கு இரத்தம் இடைக்காவிட்டால் செயற்பட முடியாது. குறைவாகக் கிடைத்தாலும் செயற்பட முடியாது. இதயத் தசைக்கு குறைவான இரத்தம் கிடைப்பதன் காரணம் இதயத் தசை இரத்த நாளங்கள் இறுக்கமடைவதாகும். இவ்வாறு இதயத்தசை இரத்த நாளங்களில் இரத்த ஓட்டம் குறையும்போது மார்பிலே நெஞ்சுவலி ஏற்படுகின்றது.

## இரத்த நாளங்களில் இரத்த ஓட்டம் குறையும் போது மார்பிலே நெஞ்சுவலி ஏற்படுகிறது

**டாக்டர்: நாகமுத்து பன்னீர்ச்செல்வம் (D.I.H.M)**

**கேள்வி: இதயத் தசை இரத்த நாளங்களில் ஏற்படும் இருவகை முக்கிய நோய்கள் என்ன?**

**பதில்:** முதலாவதாக இரத்த நாளங்கள் இறுக்கம் என்னும் நோய். இரத்த நாளத்தின் உட்பகுதியில் இரத்த அணுக்கள் சுண்ணாம்பு கொலஸ்ரொல் பிறபொருட்கள் ஆகியன தேங்கியும் இரத்த நாளத்தின் உட்புறத்தில் படிப்படியாக குறைவுபட்டு அதன் காரணமாக இந்த நோயின் இரத்த ஓட்டம் குறைவுபடும் நிலை ஏற்படுத்துகின்றது. அந்த இரத்த நாளங்கள் இரத்த பங்கீடு செய்யும் போது குறிப்பிட்ட பகுதியில் வலி தோன்றுகின்றது. எந்த அளவுக்குக் குருதி இருக்கின்றனவோ, அந்தளவிற்கு அவ்வப்போது இந்தவலி தோன்றுகின்றது.

இவ்வாறு நெஞ்சிலே அவ்வப்போது தோன்றுகின்ற வலியினை அஞைசனா பெக்டோரிஸ் என்று அழிப்பர்.

இந்த நோய்க்கு ஆளான அதாவது மாரடைப்பு நோய் ஏற்படும் ஆரம்ப கட்டத்திற்கு இலக்கானவர்களுக்கு இந்தவலி உடல் உழைப்பு நேரத்தில் ஏற்படும் சாதாரணமாக நடக்கும் போது அல்லது உணர்ச்சிவசப்படும் போது ஏற்படலாம். ஏனென்றால் இந்த சமயங்களில்தான் இதயம் அதிகம் செயற்பட வேண்டி இருக்கின்றது. எனவேதான் இவ்வேளையில் இதயம் நன்கு சுருங்கி விரிவடைந்தால் இரத்த ஓட்டம் சீராக அமையமுடியும்.

இந்த நேரத்தில் இதயத்திற்கு இரத்தப் பங்கீடு குறையும் போது நெஞ்சில் ஏற்படும் வேதனை ஒரு பாதுகாப்பு எச்சரிக்கையாகக் கருதப்படுகின்றது. நெஞ்சில் வேதனை ஏற்படும் போது மாரடைப்புநோய்க்கு இலக்கான இந்நோயாளிகள் கட்டாயமாக செயற்பாடுகளை விட்டு விட்டு ஓய்வு எடுக்கின்றனர்.

ஓய்வு கொள்ளும் போது இதயமும் இதயத் தசையும் ஓய்வு பெறுகின்றது. இத்தருணத்தில் இரத்தம் அதிகம் தேவைப்படாத காரணத்தால் நெஞ்சில் ஏற்பட்ட வேதனை குறைந்து விடுகின்றது.


# குழந்தைகளுக்கு ஏற்படும் காய்ச்சலுக்கான முதலுதவியும், சுகாதாரப் பாதுகாப்பும்

**-எஸ்.நிர்மலா-**

குழந்தைகளுக்கு காய்ச்சல் ஏற்படுவது சர்வ சாதாரணம். பல காரணங்களினால் குழந்தைகளுக்கு காய்ச்சல் வரலாம். பெற்றார் குழந்தைப் பராமரிப்பில் மிக அவதானமாக இருப்பது நல்லது. பிள்ளை விளையாடும் சூழல், உணவுப் பொருட்கள் அவர்கள் பருகும் நீர் ஆகியவற்றில் கூடிய கவனம் தேவை.

ஒருவருடைய உடல் வெப்பநிலை அதிகமாக இருக்கும் போது அவருக்கு காய்ச்சலுக்கான அறிகுறி உள்ளது என்று சொல்கின்றோம். காய்ச்சல் ஒரு நோய் இல்லை. அது பல்வேறு நோய்களுக்கான அறிகுறி. கடுமையான காய்ச்சல் குறிப்பாக சிறு குழந்தைகளின் விடயத்தில் ஆபத்தாக இருக்கக்கூடும். குழந்தைகளுக்குக் காய்ச்சல் இருக் கும் போது பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுவது சிறந்ததாகும்.

- காய்ச்சல் தனியும்வரை துணி ஏதும் இல்லாமல் சுதந்திரமாகச் செயற்பட விட்டு விடவும்.
- தூய்மையான காற்றைச் சுவாசிக்க விடவும்.
- காய்ச்சல் இருக்கும் போது (Boby Panadol) பேபி பனடோல், அஸ்பிறின் ஆகியவற்றை அவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் பாவனை முறைக்கேற்ப வழங்கவும்.
- காய்ச்சல் உள்ள குழந்தைக்கு கொதித்தாறிய நீர் பழச்சாறு, வேறு திரவ ஆகாரங்கள் ஆகியவற்றில் ஏதாவதொன்றை உட்கொள்ளக் கொடுங்கள்.
- முடிந்தால் காய்ச்சலுக்கான காரணத்தைத் தெரிந்து மருத்தும் செய்யவும்.



- நீங்கள் முதலுதவியாளராக இருப்பதன்றி வைத்தியராக மாற வேண்டாம்.
- காய்ச்சல் கடுமையாக இருந்தால் வைத்தியரை நாடவும்.
- மிகக் கடுமையான காய்ச்சலை நீடிக்க விடக்கூடாது. அது வலிப்பை அல்லது மூளையை நிரந்தரமாகப் பாதிக்கலாம். சிறு குழந்தைகள் விடயத்தில் கடுமையான காய்ச்சல் மிகவும் ஆபத்தானது. உடல் வெப்பநிலை 100 4°F பாகைக்கு அல்லது 40°C க்கு மேல் இருப்பது காய்ச்சல் அதிகமாக உள்ளது என்பதற்கு அறிகுறியாகும். அச்சமயத்தினால் பின்பற்ற வேண்டியவை.
- காய்ச்சல் உள்ளவரின் ஆடையை முற்றாக அகற்றவும்.
- காற்று கிடைக்கும்படி விசிறி விடவும்.
- மெல்லிய துணி ஒன்றினால் அவரது மார்பை மூடவும். சிறிய துணிகளை குளிர்ந்த நீரில் நனைத்து அவருடைய நெற்றி,கை,கால்களின் மீது ஒத்தடம் பொடுவது நல்லதாகும். காய்ச்சலினால் சக்தி அதிகம் விரையமாவதால் நோயாளி தெம்போடு இருப்பதற்கு சிறிது ஜீவனி, இளநீர், குளுக்கோஸ் கலந்த குளிர்ந்த நீரைக் கொடுக்கவும்.
- காய்ச்சல் தணிய ஏதாவது மருந்து கொடுக்கவும், (அஸ்பிறின், பேபி பனடோல், அசெட்டமினோ.'.பென் (பரசிட்டமோல்) ஆகியன பயனுள்ளது.

ஒரு வயதுகுற்றைந்த குழந்தைக்கு அஸ்பிறின் மாத்திரை எதுவும் கொடுக்காதீகள், மாத்திரைகள் விழுங்க முடியாத குழந்தைகளுக்கு



பொடி செய்து கொடுக்கவும். மாத்திரைகளில் அசெட்டமினோ.', பென் பாதுகாப்பானது.

மாத்திரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அளவுகளில் வழங்கவும். கடுமையான காய்ச்சல் உடனே தணியவில்லை என்றால் அல்லது வலிப்பு ஏற்பட்டால் குளிர்ந்த நீரைப் பயன்படுத்தி நோயாளியின் உடம்பைக் குளிர்ச்சியாக வைத்திருக்கவும். உடனடியாக மருத்துவ உதவியை நாடவும்.

## பள்ளி செல்லும் பிள்ளைகளே.....

பள்ளி செல்லும் பிள்ளைகளே
பயனுடனே கேட்டிடுங்கள்
பக்குவமாய் பாடங்களை
பயமின்றிப் படிப்பதற்கு-நற்
பழக்கங்கள் சில வற்றை படித்திடுங்கள்
பதற்றமின்றி பாதையிலே
பக்கம் பார்த்து நடந்திடுங்கள்
பாதமதில் பாதணியை
பழக்க மத்தில் அணிந்திடுங்கள்
காலையில் எழுந்திடுங்கள்
மலகூடம் சென்றிடுங்கள்
சவக்காரம் கையில் இட்டு
சடுதியாய் கழுவி விடுங்கள்
பல்துலக்கி உடல் கழுவி- திருநீறு
பக்தியுடன் பூசிடுங்கள்
பயனுள்ள உணவு தன்னை
பசித்த பின்னே புசித்திடுங்கள்
உணவு உண்ண முன்பும்
மலங் கழித்த பின்பும்
சமைப்பதற்கு முன்பும்
விளையாடிய பின்னரும்
சவர்க்காரம் கொண்டே
கழுவிடுங்கள் கைகளை
பள்ளியிலே படித்த பின்னர்
படித்திடுங்கள் வீட்டினிலே
பதவிதனை வகித்திடலாம்
பாங்காக வாழ்ந்திடலாம்
உடுத்திடுங்கள் உலர்ந்த ஆடை
உவகையுடன் வாழ்ந்திடுங்கள்
உலகத்தில் உங்களுக்கு
உரிமையுண்டு வாழ்வதற்கு
சுத்தம் தன்னை நித்தம் பேணி
நோய் நொடிகள் எதுவுமின்றி
சுகமுடனே நெடுங்காலம்
நீங்கள் வாழ் வாழ்த்துகின்றேன்
வாழ்கவென்று.

எஸ். உதயராஜ்

# ஐ.நாவினுடையதா? ஏ.எவ்.பி.ஸ்தாபனத்தினுடையதா?

சிறுவர்களைப் படைக்கு சேர்க்கும் விடயம் தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐ.நா செயலாளர் நாயகம் கொபி அனான் பாதுகாப்புச் சபையைக் கோரியுள்ளார் என ஏ.எவ்.பி செய்தி ஸ்தாபனத்தின் கொழும்பு முகவரால் அனுப்பப்பட்ட செய்தி தமிழ் மக்களிடையே பெரும் வேதனையை ஏற்படுத்தியிருந்தது. எதற்காக இந்த வேளையில் கொபி அனான் இவ்வாறு வேண்டுதலை விடுத்தார் என்கின்ற கேள்விகளும் எழுந்தன.

இந்தச் செய்தியின் உண்மை தான் என்ன?

இன்று 23 ஆம் திகதி ஐ.நா.பாதுகாப்புச் சபையானது 'போரும் சிறுவர்களும்' எனும் விடயம் தொடர்பான விவாதத்தில் ஈடுபடவுள்ளது. 15 உறுப்புரிமை நாடுகளைக் கொண்ட அரசியல் வலுமிக்க பாதுகாப்புச் சபையின் இந்த விடயம் தொடர்பாக ஐ.நா செயலாளர் நாயகம் அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளார். இது பாதுகாப்புச்சபையின் பொதுவான நடைமுறையாகும். இந்த அறிக்கையின் பிரதிகள் அரசுகளுக்கு வழங்கப்பட்டுவிட்டன. எனினும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் பார்வைக்கு அடுத்த வாரமே இது வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அறிக்கையானது உலகளாவிய ரீதியில் போர் இடம்பெறும் நாடுகளின் சிறுவர்கள் மீது நடத்தப்படும் வன்முறைகள், மனிதாபிமான நெருக்குவாரங்கள் மற்றும் சிறுவர்கள் போரில் ஈடுபடுதல் தொடர்பான தகவல்களையும், பரிந்துரைகளையும் கொண்டதாக அமையும்.

இந்த அறிக்கையில் 11 நாடுகளும், 42 இயக்கங்களும் சர்வதேச சிறுவர் தொடர்பான நெறிமுறைக்கு மாறாக செயற்படுவதான குற்றச்சாட்டுக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என ஏ.எவ்.பி செய்தி நிறுவனம் ஐ.நா சிறப்புத் தூதுவர் ஒலரா ஒட்டுணவை ஆதாரம் காட்டி செய்தி வெளியிட்டிருந்தது. உலகளாவிய ரீதியில் சுமார் 300,000 சிறுவர்கள் (18 வயதிற்குக் குறைந்தவர்கள்) போரில் ஈடுபடுவதாக ஐ.நா கணிப்பிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சூடான் டார்பூர் மிக மோசமாக சிறுவர் வதை நடக்கும் இடமாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. லைபீரியா, உகண்டா, நேபாளம் போன்ற நாடுகளில் இடம்பெறும் சம்பவங்களும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அறிக்கையில், புலிகள்-தமிழீழ தேசம் தொடர்பான பகுதி இடம்பெற்றுள்ளது. 18வயதிற்குக் குறைந்த சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்துவது தொடர்பான குற்றச்சாட்டுக்கள் இங்குள்ளன. இவ்வாறு அனைத்துலக ரீதியான இந்த அறிக்கையானது சில பரிந்துரைகளை பாதுகாப்புச் சபையின் விவாதத்திற்கு முன்வைத்துள்ளது. அதில், மோசமான சிறுவர்வதை மற்றும் படையில் சேர்த்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசுகளிற்கு எதிராகவும், இயக்கங்களிற்கு எதிராகவும் சில தேர்வு செய்யப்பட்ட நடவடிக்கைகளை அவர் பிரேரித்துள்ளார்.

குறித்த குற்றச்சாட்டுகளுக்குள்ளான தரப்பினர் அதனை தீர்க்காவிட்டால் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளாக அவற்றை அவர் பிரேரித்துள்ளார்.அதில்,தவிர்க்கப்பட வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடும் தனிநபர்களிற்கு எதிரான சர்வதேசப் பயணத்தடை அமுல்படுத்துவதும் ஒன்றாகும். மேலும் அவ்வாறான நாடுகள் மற்றும் இயக்கங்களிற்கான இராணுவ உதவிகளைத் தடுப்பது மற்றும் நிதி வளங்களைக் கட்டுப்படுத்துவது என்பன அடங்குகின்றன. எனினும் இந்தப் பிரேரணைகள் உடனடியாக அமுலுக்கு வருபன வல்ல.

ஐ.நா செயலாளர் நாயகத்தின் சிறுவர் விவகாரங்களுக்கான சிறப்புப் பிரதிநிதி ஒலரா ஒட்டுணு ஊடகங் களுக்கு கடந்த 9ஆம் திகதி வழங்கிய கருத்துக்களின் பிரகாரம், இனி சிறுவர்வதை மற்றும் துஸ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுக்களைக் கண்காணிப்பதற்கும், ஆவணப்படுத்துவதற்குமான ஐ.நா பொறிமுறையொன்று உருவாக்கப்பெற்று அதன் அடிப்படையிலேயே அமுல்படுத்துவதற்கான நெறிமுறை உருவாக்கப்படும். அந்த நெறிமுறையில் பின்வரும் விடயங்கள் முக்கியமானதாக கணிக்கப்படும். சிறுவர்களைப் படுகொலை செய்தல், காயப்படுத்தல்-பாடசாலைகள் வைத்தியசாலைகளைத் தாக்குவது,சிறுவர்களை பாலியல் வதைக்குட்படுத்துவது, சிறுவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை நிறுத்துவது, சிறுவர்களைப் படையில் சேர்ப்பதுவும் போரில் ஈடுபடுத்துவதுமே அவையாகும்.

இன்று 23 ஆம் திகதி பாதுகாப்புச்சபை இந்த பிரேரணைகளை ஆராய்ந்து சம்மதிக்கும் பட்சத்தில் அது நடைமுறைக்கு வரும். எனினும் உலக இயக்கப் போக்கில்- குறிப்பாக ஈராக்கில் - விமானக் குண்டு வீச்சிலும், போரிலும் ஈடுபட்டுள்ள அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் இந்தப் பிரேரணைகளை தீவிரமாக ஆதரிப்பார்களோ என்பது கேள்விக்குரியது. மாறாக, இனங்காணப்பட்டு ஐ.நா பட்டியலிடும் 11 நாடுகள் மற்றும் 42 இயக்கங்களுக்கு எதிரான கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு மட்டுப் படுத்தப்பட்ட சம்மதம் கிட்டக் கூடும்.

**கொழும்பு ஆங்கில சிங்கள ஊடகங்கள் வழமையாக புலிகளுக்கு எதிராக ஒரு துளி கிட்டினாலும் கடலாக விபரிப்பவர்கள். அதேபோன்று ஒரு குறிப்பிட்ட சர்வதேச செய்தி நிறுவனத்தில் நீண்டகாலமாக செய்தி ஆசிரியராக பணிபுரியும் ஒரு சிங்கள இனவாத சிந்தனை கொண்ட செய்தியாளரே இந்த செய்திக்கு சர்வதேச அந்தஸ்த்து தேடிக்கொடுத்தார்.**

**ஜெனீவாவிலிருந்து**
**பொ.ராஜா**

உண்மையில் இந்த நெறிமுறை 1994களில் வந்திருந்தால் இன்று சந்திரிகாவும், கதிர்காமரும் கடுமையான குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு ஒரு நாட்டிற்கும் செல்லமுடியாது கறுவாக் காட்டுக்குள் முடங்கிப்போயிருப்பார்கள். அந்தளவு பெரும் எண்ணிக்கையிலான சிறுவர்கள் மீதான போர்க்குற்றங்களைப் புரிந்தவர்கள் அவர்கள். இங்கு புலிகளுக்கு எதிரானது என்கின்ற விடயம் போரில் 18 வயதுக்குக் குறைந்தவர்களை படையில் சேர்ப்பது என்கின்ற சர்ச்சையான குற்றச்சாட்டாகும். புலிகளின் அரசியல்துறை இந்த விடயம் தொடர்பாக தொடர்ச்சியான கருத்துப்பரிமாற்ற ங்களையும், நடவடிக்கைகளையும் ஐ.நாசிறுவர் பாதுகாப்பு நிதியத்து டன் இணைந்து செய்து வருகின்றது. எனினும், அரசில் உள் நோக்குடன் புலிகளுக்கு எதிரான குற்றச்சாட்டாக இந்த விடயத்தினை ஒரு சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு முன்வைத்து வருகின்றது. கிடைக்கப் பெற்ற தகவல்களின் கீழ்யுனிசெவ் நிறுவனம் முன்வைத்துள்ள சுமார் 1,300 பதினெட்டு வயதிற்குக் குறைந்தவர்கள் தொடர்பான விவரங்க்ளினை கையாள்வதற்காக புலிகளின் சமாதானச் செயலகம் தனித்த குழுவொன்றினை அமைத்து பரிசீலனைகளை மேற்கொண்டு இனங்காணப்பட்டவர்களை படைகளில் இருந்து விலத்திவருகின்றது.

இங்கு 18 வயுதிற்குக் கீழ் புலிகள் படையில் ஆட்களை இணைக்கக் கூடாது எனக்கேட்கும் மேற்குலக நாடுகளில் சில சட்டபூர்வமாகவே 15 வயதினை உடையவர்களைப் படையில் சேர்பதற்கான எல்லையாக கொண்டுள்ளன. அண்மையில் பிரபலமானதொரு தொலைக் காட்சி ஆவணமானது ரஷ்யா 15 வயதிலும் குறைந்த சிறுவர்களை இராணுவம்சார் கல்வி அமைப்புகள் ஊடாக உள்வாங்கி வருவதை படமாக்கியுள்ளது.



அடுத்து எழும் கேள்வி, எவ்வாறு இந்தச் செய்தி அதன் சரியான கோணங்களில் வெளியிடப்படாது புலிகளுக்கு எதிரான ஐ.நா நடவடிக்கை என பரபரப்பா க செய்தி வெளியிட்டது என்ப தே.

கொழும்பு ஆங்கில சிங்கள ஊடகங்கள் வழமையாகபுலிகளுக்கு எதிராக ஒரு துளி கிட்டினாலும் கடலாக விபரிப்பவர்கள். அதேபோன்று ஒரு குறிப்பிட்ட சர்வதேச செய்தி நிறுவனத்தில் நீண்ட காலமாக செய்தி ஆசிரியராக பணிபுரியும் ஒரு சிங்கள இனவாத சிந்தனை கொண்ட செய்தியாளரே இந்த செய்திக்கு சர்வதேச அந்தஸ்த்து தேடிக் கொடுத்தார்.

மேலும் சுவாரஸ்சியமான விடயம் கொங்கோவில் சமாதானப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஐ.நா சமாதானப் படைகளுக்கும் எதிராகவும் அந்த செயலாளர் நாயகத்தின் அறிக்கையில் கண்டனங் கள் உள்ளதாக ஏ.எவ்.பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. அதே போன்று செச்சின் மற்றும் அயர்லாந்து நாடுகளில் உள்ள இயக்கங்களின் பெயர்கள் ஐ.நா பட்டியலில் இருந்து தவிர்க்கப்பட்டுள்ளன. ஏனெனில் குறித்த நாடுகளான ரஷ்யாவும், பிரித்தா னியாவும் தமது நாடுகளில் ஆயுதப் போர் இடம்பெறுகின்றது என ஐ.நா விவரிப்பதை ஏற்றுக் கொள் ளவில்லை என்பதால் குறித்த இயக்கங்களின் நடவடிக்கைகள் ஐ.நாவின்விவாதத்திற் குள்ளடங்கவில்லை.

இறுதியாக, உலக நாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் அணுகுமுறை என்பது பன்மையான அணுகு முறைகளைக் கொண்டதாகவிருக்கும். அந்த உறவுகளில் முரண்பாடுகளும் உண்டு. இணக்கப்பாடுகளும் உண்டு. இந்தப் பன்மையான உறவுகளின் அச்சிலேயே உலகம் இயங்குகின்றது. தமிழீழ தேசத்திற்கும், உலகிற்குமிடையேயான உறவுகளும் இவ்வாறானதே.

# மக்களுடைய தேவைக்காக திட்டங்கள் தீட்டப்படவேண்டும் என்ற மனப்பாங்கு அனைவருக்கும் உருவாகவேண்டும்

## தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி

(க. சரவணன்)

கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு பாடசாலைகளில் தஞ்சம் புகுந்து வாழுகின்ற மக்களுக்கு தற்காலிக வதிவிடங்களை எடுத்த எல்லா நிறுவனங்களும் பொறுப்புடன் செயற்படுகின்றனரா? இதை நாங்கள் கவனத்திற் கொள்ள வேண்டிய முக்கியமான விடயமாகும்.ஏனென்றால் தங்களுடைய ஒரு திட்டத்திற்கு அமைவாக தாங்கள் போடும் திட்டத்தை மக்களுக்குத் திணிப்பதை நாங்கள் பல இடத்தில் பார்க்கின்றோம். மக்களுடைய தேவைக்காகத் திட்டங்களைப் போடவேண்டும் என்ற மனப்பாங்கு உருவாக வேண்டும். இவ்வாறு விடுதலைப்புலிகளின் மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தம்பட்டை பிரதேச மக்களுக்கு தமிழர்புனர்வாழ்வுக்கழகம் தம்பட்டைத்திடலில் தற்காலிக குடிசை 200 அமைக்கும் திட்டத்தில் முதற்கட்டமாக 74 தற்காலிக குடிசைகளை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையில் தமிழினி இவ்வாறு தெரிவிததார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தம்பட்டைக்கிராமம் ஒரு சாதாரண கிராமம் அல்ல. எங்களுடைய வரலாற்றுப் பெருமைமிக்க கிராமமாகும். இந்தக் கிராமத்தில் வாழ்ந்து பேரலையினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு புலம் பெயர்ந்த இந்த மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தற்காலிக வீடுகளை அமைத்து கொடுத்துள்ளது.

உண்மையிலே அவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் உழைத்து, வியர்வை சிந்தி, இரத்தம் சிந்தி கல்லுக்கல்லாகச் சேர்த்து கட்டிய எத்தனையோ வீடுகளை அலைகளில் பறிகொடுத்து இன்று மனவேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எங்களுடைய மக்களின் வியர்வையும், கண்ணீரும் ஒவ்வொரு சத உழைப்பும், அவர்கள் இழந்துபோன அந்த மனவேதனைக்குள் இருந்தாலும் நாங்கள் மீள வாழவேண்டும். எங்கள் எதிர்கால சந்ததி வாழவேண்டும். எங்களுக்கான தேசத்தைக் கட்டியெழுப்பவேண்டும். என்றஅந்த உயர்ந்த நோக்கத்துடனும் இலட்சியத்துடனும் நாங்கள் எங்கள் வேதனைகளையும் கவலைளையும் ஒரு புறம் வைத்து விட்டு அடுத்த கட்ட வாழ்க்கையைத் தயார் படுத்துவதற்காக இந்தத் தற்காலிக கொட்டில்கள் உங்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.இந்தப் பேரலைகுப் பிறகு பலர் நிவாரணப் பொருட்களை கொடுப்பவர்களாக இங்கு வந்தார்கள்.கொடுத்தார்கள் மக்கள் வாங்கினார்கள், இந்த நிவாரணங்களைக் கொடுப்பது என்பது நல்ல உயர்ந்த மனப்பாங்கு ஆனால் அந்த நிவாரணங்களை கொடுக்கும் போது வாங்குபவர்களின் உளவியல் மன நிலையைப் புரிந்து கொண்டு அவர்கள் செயற்படவேண்டும் என்பது முக்கிய விடயமாகும். ஏனென்றால் நிவாரணங்கள் என்ன என்ன வழங்கப்பட்டது எப்படி எப்படி கொடுக்கப்பட்டது. என்பதை நாங்கள் பார்த்தோம். இந்த இடத்தில் எல்லாநிறுவனங்களும் நிவாரணங்களை வழங்கின அரச, அரசசார்பற்ற தனியார் நிறுவனங்கள் யாராக இருந்தாலும் அந்த நிவாரணம் கொடுக்கப்பட வேண்டும்.என்ற மனப்பாங்கு இருந்தது அது பாராட்டத்தக்கது,ஆனா



ல் அந்த நிவாரணங்களைப் பெற்றுக் கொள்பவர்களை கௌரவிக்கும் முகமாக அவர்களின் மனநிலையைப்புரிந்து கொண்டு நாம் செயற்படவேண்டும். எல்லோரும் தங்கள் திட்டபபடி செய்துகொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மக்களுடைய தேவையை உணர்ந்து இந்தத் தற்காலிக குடிசைகளை அமைத்துக் கொடுத்தமையை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகின்றேன் என்றார்.

# உலக செய்திகள்

## ஐரோப்பாவின் ஒற்றுமைக்கு அமெரிக்க அதிபர் புஷ் அழைப்பு.



(பி.பி.சி)

ஐரோப்பாவுக்கான முதலாவது முழுநாள் விஜயம் ஒன்றில் பேசிய அமெரிக்க அதிபர் புஷ் அமெரிக்க ஐரோப்பிய ஒற்றுமையின் புதிய சகாப்தத்துக்கு பலமான அழைப்பு விடுத்துள்ளார்.

ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பலமான நட்புறவு உலகெங்கிலும் அமைதி மற்றும் சுபீட்சத்துக்கு மிகவும் அவசியமானது என்று பிரசல்ஸ் நகரில் ஐரோப்பிய ஒன்றிய மற்றும் நேட்டோ நாடுகளின் தலைவர்கள் மத்தியில் பேசும் போது புஷ் கூறினார்.

தாம் உடனடியாக கையாள வேண்டிய பிரச்சினையாக மத்திய கிழக்குப் பிரச்சினையே உள்ளது என்று விபரித்த புஷ், அரபு இஸ்ரேல் விவகாரத்துக்கான தீர்வு




இப்போது எட்டக்கூடிய நிலையை அடைந்துள்ளது என்றும் கூறினார்.

ஈராக் தொடர்பான கடந்த கால முரண்பாடுகள் ஒதுக்கி வைக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்துக்கு எதிராக போராடி உலகெங்கிலும் ஜனநாயகத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு அவர் பலமான அழைப்பையும் விடுத்தார்.

பருவநிலை மாற்றங்கள் தொடர்பான சவால்களுக்கு எதிராக விரைவான நடவடிக்கைகள் அவசியம் என்று கோரிய புஷ் அவர்கள் க்யோட்டோ ஒப்பந்தம் தொடர்பிலான உடன்பாடின்மை பின்தள்ளப்பட்டு புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக புதிய தீர்வுகள் காணப்பட வேண்டும் என்றும் கூறினார்.

## இந்தியாவுக்கான பெற்றோலிய வாயு திட்டத்தை ஈரான் வரவேற்றுள்ளது.



(பி.பி.சி)

ஈரானில் இருந்து பெற்றோலிய வாயுவை பாகிஸ்தான் ஊடாக இந்தியாவுக்கு எடுத்துச் செல்வதற்கான குழாய்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் பிராந்திய அமைதியையும் வணிகத்தையும் ஊக்குவிக்கும் என்று ஈரான் நாட்டின் வெளியுறவு அமைச்சர் கமால் ஹறாஷி கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதை ஊக்குவிக்கும் வகையிலான ஒரு சூழ்நிலை காணப்படுவதாக புதுடில்லியில் பேசும் போது ஹறாஷி கூறினார்.

கடந்த வாரம் நடைபெற்ற சந்திப்பு ஒன்றின் போது இந்தத் திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்குவதற்கான தமது சமிக்ஞையை இந்திய பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்கள் வெளியிட்டிருந்தனர்.

தமது அதிகரித்து வரும் எரிபொருள் தேவைக்காக இந்தியா கடந்த பல வருடமாக புதிய பெற்றோலிய எரிவாயு வளத்தைக் கோரி வருகின்றது.

இந்தத் திட்டத்தினால் தமது பிராந்திய போட்டி நாடான பாகிஸ்தான் நன்மை பெறும் என்றும் இந்தியாவுக்கான எரி பொருள் விநியோகம் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் போய்விடும் என்றும் விமர்சகர்கள் கூறுவதால் இந்தக் குழாய் நிர்மாணத் திட்டம் இந்தியாவில் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.

## காஷ்மீரில் பனிப்பாறை விழுந்து நாற்பது பேர் பலி



(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் கடும் பனிப்பொழிவில் சிக்கி 40 பேர் பலியாயினர். பனியில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் விமானப்படை விமானங்கள், ஹெலிகொப்டர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு விமானங்கள் மூலம் உணவுப் பொட்டலங்கள் வீசப்பட்டன. காஷ்மீரில் கடந்த ஆறு நாட்களாகக் கடும் பனிப்பொழிவு காணப்படுகிறது. முன் எப்போதும் இல்லாத அளவுக்குப் பனிப்பொழிவு இருப்பதால், நாட்டின் பிற பகுதிகளில் இருந்து காஷ்மீர் துண்டிக்கப்பட்டுள்ளது. சாலைகள், ரயில் பாதைகளில் இரண்டு முதல் மூன்று அடி வரை பனி மூடியுள்ளதால் போக்குவரத்து முற்றிலும் பாதிக் கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள், குடிநீர் கிடைக்காமல் காஷ்மீர் மக்கள் நெருக்கடியில் சிக்கியுள்ளனர். தவிர மின்விநியோகமும் பாதிக்கப்பட்டதால், பெரும்பாலான இடங்கள் இருளில் மூழ்கி உள்ளன.

## இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் இருபது பேர் பலி!

(பி.பி.சி)

இந்தோனேசியாவின் பாண்டங் நகரில் ஒரு சேரிப்பகுதியில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டதில் குறைந்த பட்சம் 20 பேர் கொல்லப்பட்டிருப்பதாக இந்தோனேசிய அதிகாரிகள் கூறுகின்றனர் மேலும் பலரைக் காணவில்லை.

கணக்கில் வராதவர்களின் எண்ணிக்கை நூற்று நாற்பதுக்கும் அதிகம் என்று பொலிசார் கூறுகின்றனர். கடும்மழை காரணமாக நகராட்சி குப்பை மேடு ஒன்று சரிந்ததில் எழுபது வீடுகள் வரை குப்பையாலும், மண்ணாலும் மூடப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

சுமார் ஐம்பது பேர் வரையில் இடிபாட்டுக் குப்பையிலிருந்து



வெளியில் இழுத்துப் போட்டுள்ளதாக தேடுதல் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள ஒருவர் கூறினார். மீட்புப் பணி தொடர்வதாகவும் அவர் தெரிவித்தார். இந்தோனேசியாவில் மழைக்காலங்களில் நிலச்சரிவுகள் ஏற்படுவதென்பது ஒரு நிலையான பிரச்சினையாகி விட்டதென்று! அங்குள்ள செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

## பலஸ்தீன கைதிகள் ஐநூறு பேரை இஸ்ரேல் விடுவித்தது.




(பி.பி.சி)

இஸ்ரேல் பலஸ்தீனத் தலைவர்களுக்கு இடையில் இம் மாதம் எகிப்தின் ஸரம்-அல்-ஷேக் கில் நடைபெறும் உச்சி மாநாட்டுக்கு முன்பாக பரஸ்பர நம்பிக்கைகளை மேம்படுத்தும் முயற்சிகளின் ஒருபகுதியாக பலஸ்தீனகைதிகள் ஐந்நூறு பேரை இஸ்ரேல் விடுவித்துள்ளது.

மேற்குக் கரையிலும் காசாவிலும் விடுக்கப்பட்ட கைதிகள் பஸ் வண்டிகளில் பல எல்லைக் கடவை மையங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

அங்கே விடுக்கப்பட்டவர்களின் உறவினர் பெருங்கூட்டமாக கூடி நின்று அவர்களை வரவேற்றனர். கடந்த பத்து ஆண்டுகளில் மிக அதிகளவில் கைதிகள் விடுதலை செய்யப்படும் சம்பவம் இது தான்.

மேலும் நானூறு கைதிகளை விடுவிப்பதாக இஸ்ரேல் உறுதியளித்துள்ளது. யார் யாரை விடுவிப்பது என்பதை ஒரு கூட்டுக்குழு முடிவு செய்து வருகின்றது. விடுதலை செய்யப்பட வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்ப்பவர்கள் இவர்களல்ல என்று பலஸ்தீன அதிகாரிகள் கூறுகின்றனர். தற்போது கைதிகள் விடுதலை செய்யப்பட்ட நிகழ்வில் மூத்த பலஸ்தீன அதிகாரிகள் கலந்து கொள்ளவில்லை.



இயற்கையே இந்தோனேஷியா மீது ஏனிந்தக் கோபம். இந்தோனேஷியாவில் உள்ள பான்டங் என்ற இடத்தில் நேற்று முன்தினம் பெய்த பலத்த மழையால் கடுமையான நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் ஏராளமான வீடுகள் தரைமட்டமாயின. 150க்கும் மேற்பட்டோர் பலியாயினர். இறந்தவர்களை கிரேன் மூலம் மீட்கும் பணிகள் நடந்து வருகின்றன.

## லெபனானில் இருந்து விரைவில் படைகளை வாபஸ் பெற சிரியா உடன்பாடு

(பி.பி.சி)

சிரியா தனது அயல் நாடான லெபனானில் இருந்து தனது படைகளை வாபஸ் பெறுவதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளும் என்று அரபு லீக்கின் தலைமைச் செயலர் அமர் மௌஸா கூறியுள்ளார்.

டமாஸ்கஸில் சிரிய அதிபர் பாஷர் அல் ஆஸாத்துடனான பேச்சுவார்த்தைக்குப் பின்னர் மௌஸா இதனைக் கூறினார். லெபனானின் உள்நாட்டுப் போரை அடுத்து உருவான 1989ம் ஆண்டுக்கான தைவ் உடன்படிக்கைக்கு அமைய சிரியப் படைகளின் வாபஸ் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு ஆஸாத் உடன்பட்டதாக அரபு லீக்கின் செயலர் கூறினார்.

இரண்டு வருடத்திற்குள் சிரியா தனது படைகளை லெபனானின் கிழக்கு பாக்கா பள்





ளத்தாக்குக்கு வாபஸ் பெற வேண்டும் என்று அந்த ஒப்பந்தம் கூறுகின்றது.

அதே வேளை லெபனானில் பெய்ரூட் நகரில் சிரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சிரியாவின் ஆதரவுடனான லெபனான் அரசு பதவி விலக வேண்டும் என்று கோரினார்கள். லெபனானின் முன்னாள் பிரதமர் றபிகஹரிரி படுகொலை செய்யப்பட்ட ஒரு வாரத்தின் பின்னர் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது. ஹரிரியின் படுகொலையில் சிரியாவுக்கும் தொடர்பு இருக்கலாம் என்று ஒரு உயர்மட்ட சந்தேகம் இருக்கும் நிலையில் அது தொடர்பில் ஒரு சுயாதீன புலன் விசாரணை தேவை என்று பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜாக் ஸ்ட்ரோ அழைப்பு விடுத்துள்ளார்.

### பைனான்ஸ் நிறுவனத்தில் போட்ட பணம் மீண்டும் மோசடி கண்ணீருடன் முதலீட்டாளர்கள்



# இந்திய கிரிக்கெட் அணி மண்டல ரீதியாக மோதல்

(இந்தியாவில்)

டிராவிட் தலைமையிலான அணிகள் நேற்று மோதின. மண்டல அளவிலான துலீப் டிராபி கிரிக்கெட், மண்டல அணி, டிராவிட்டின் தென் மண்டல அணியை எதிர்த்து விளையாடியது. சச்சின் அணியில் இர்பான் பதான், அகார்கர், சகிர்கான், பார்த்தீவ்



நான்கு நாள் போட்டிகள் தற்போது நடந்து வருகின்றன. ஐத ராபாத்தில் நேற்று ஆரம்பித்த லீக் போட்டியில் சச்சின் தலைமையிலான மேற்கு பட்டேல் போன்ற முன்னணி வீரர் களும், டிராவிட் அணியில் பாலாஜி, லட்சுமண், தினேஷ் கார்த்திக், அனில் கும்ளே ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர்.

இதனால் இரு அணிகளும் சமவலிமையுடன் காணப்பட்டன. காயத்திலிருந்து மீண்ட சச்சின் நீண்ட இடைவெளிக்குப் பிறகு இப்போட்டியில் விளையாடியதால் அதிகம் எதிர் பார்க்கப்பட்டார்.

போட்டி குறித்து சச்சின் கூறுகையில், "பாகிஸ்தான் தொடருக்கு முன்னதாக பயிற்சி செய்வதற்கு, சிறந்த வாய்ப்பாக இத்தொடர் அமைந்தது. தவிர திறமைமிக்க இளம் வீரர்கள், இரு அணியிலும் இடம் பெற்றதால் கடும் சவால் நிறைந்ததாக இருந்தது. முன்னதாக, சச்சின் இல்லாமல் களமிறங்கிய முதல் லீக் போட்டியில் மேற்கு மண்டல அணி, வடக்கு மண்டல அணியிடம் தோல்வி அடைந்தது.

நாக்பூரில் தொடங்கும் மற்றொரு போட்டியில் க்ங்குலி தலைமையிலான கிழக்கு மண்டல அணி, வங்கதேச அணியைச் சந்திக்கின்றது. வங்கதேச அணி இத்தொடரில் பங்கேற்பது இதுவே முதல் முறை.

# காயத்திலிருந்து மீண்டு பயிற்சியை ஆரம்பிக்கிறார் சானியா மிர்சா

(பெங்களூர்)



காயத்தில் இருந்து மீண்டு வரும் சானியா மிர்சா நேற்று முன்தினம் பயிற்சியை தொடக்கினார். இந்திய டென்னிஸ் அரங்கின் இளம் நட்சத்திரமான சானியா, அவுஸ்ரேலிய ஓபன் மூன்றாம் சுற்றுக்கு முன்னேறி சாதித்தார். பின்னர் ஐதராபாத் ஓபனில் சம்பியன் பட்டம் வெல்ல, தரவரிசை பட்டியலில் 99வது இடம் பெற்றார். கணுக்கால் காயத்தால் அவதிப்பட்டு வந்த இவர், நேற்று முன்தினம் பெங்களூரில் பயிற்சியில் இறங்கினார். கணுக்கால் காயம் முழுமையாக குணமடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# நெதர்லாந்து டென்னிஸ் தொடரில் முதல்தர வீரர் ரோஜர் பெடரர் சம்பியன்

(ரோட்டர்டாம்)

அம்ரோ டென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் கைப்பற்றினார்



ரோஜர் பெடரர். நெதர்லாந்து நாட்டின், ரோட்டர்டாம் நகரில் ஏ. பி. என். அம்ரோ டென்னிஸ் தொடர் நடந்தது. முன்னணி வீரர்கள் பங்கேற்ற இந்தத் தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடந்தது. முதல்தர வீரரான, சுவிஸ் நாட்டின் ரோஜர் பெடரர், குரோஷிய வீரர் இவான் ஜூபிசிக் மோதினர்.

போட்டி மிகக்கடுமையாக இருந்தது. இரு வீரர்களும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் மோதினர். குறிப்பாக, பெடரர் ஆட்டத்துக்கு ஈடு கொடுத்து சிறப்பாக விளையாடினார் ஜூபிசிக். ஆனாலும், அதிர்ஷ்டம் பெடரர் பக்கமே இருந்தது.

நீண்ட போராட்டத்துக்குப் பின் 5-7, 7-5, 7-6 7-5 என்ற செட் கணக்கில் ஜூபிசிக்கை வீழ்த்தி, சம்பியன் பட்டம் கைப்பற்றினார் பெடரர். கடந்த ஆண்டில் 11 பட்டங்கள் கைப்பற்றிய பெடரர், இந்த காலப்பகுதியில் ஜெயிக்கும் இரண்டாவது தொடர் இது. சமீபத்தில், அவுஸ்ரேலிய ஓபன் அரையிறுதியில் தோற்ற ரோஜர், மீண்டும் தனது திறமையை நிரூபித்திருக்கிறார். 2003, ஜூலைக்குப் பிறகு. பங்கேற்ற எந்த இறுதிப்போட்டியிலும் இதுவரை பெடரர் தோற்றதே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# காயத்திலிருந்து குணமாகிவிட்டார் சச்சின் பாகிஸ்தான் தொடரில் பங்கேற்பார்

(ஐதராபாத் )

கிரிக்கெட் ரசிகர்களுக்கு இது மிக மகிழ்ச்சியான செய்தி. காயத்தில் இருந்து முழுமையாகக் குணமடைந்து விட்டாராம் சச்சின் டெண்டுல்கர். அவரே சொல்கிறார். பாகிஸ்தான் தொடருக்காக பயிற்சியைத் தொடங்கி விட்டார். மீண்டும் ஒரு இந்தியா, பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர். தொடங்கப் போகின்றது. மூன்று டெஸ்ட், ஆறு ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க எதிர் வரும் 28ம் திகதி இந்தியா வருகின்றது பாகிஸ்தான் அணி. இந்தத் தொடரில் "சிறப்பான துடுப்பாட்ட வீரர்" சச்சின் டெண்டுல்கர் பங்கேற்க முடியுமா, இல்லையா என்பதில் சந்தேகம் நிலவி வந்தது. அந்த சந்தேகங்களுக்கு நேற்று முன்தினம் சச்சின் வைத்தார் அழுத்தமான முற்றுப்புள்ளி!



# ஏங்கள் குரல்

## தொகுப்பு:- விநோக்காந்

# நெல்விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிப்பு

தற்போது போக அறுவடை ஆரம்பித்து முடிவடையும் தறுவாயில் உள்ளது. மட்டக்களப்பில் பல இடங்களிலும் செய்கை பண்ணப்பட்ட நெற்காணிகளிலேயே இவ்வறுவடை நடைபெற்று வருகின்றது. ஆனால் நெல்லுக்கான விலை குறைவடைந்துள்ளமை நெற் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு பெரும் கவலையைத் தோற்று வித்துள்ளது.



மட்டக்களப்புப் பகுதிகளில் அரசாங்கத்தின் முறையான நெல் கொள்வனவுத் திட்டம் இல்லாத காரணத்தினால் தனியார் இடைத் தரகர்கள் நெல்லைக் குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்து வருவதாகத் தெரிவிக்கும் விவசாயிகள் அரசாங்கம் ஒரு கிலோ நெல்லை 16 ரூபாவாக உத்தரவாத விலையைத் தீர்மானித்த போதும், இடைத்தரகர்கள் ஒரு கிலோ நெல்லை 10 தொடக்கம் 12 ருபா வரையுமே கொள்வனவு செய்வதாகத் தெரிவிக்கின்றனர். அதாவது அதிகரித்த உற்பத்திச் செலவு, தொடர்ச்சியாகப் பெய்த் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு போன்றவற்றாலும் பாதிப்படைந்த நாம் அறுவடை செய்யும் நெல்லை குறைந்த விலைக்கு விற்பனை செய்வதனால் எமது தொழிலில் நஷ்டமே ஏற்படுகின்றது. ஆனால் எதுவித முதலுமின்றி நெல் கொள்வனவில் ஈடுபடும் இடைத்தரகர்கள் இந்த நெல் கொள்வனவு மூலம் சிறந்த இலாபத்தைப் பெறுகின்றனர். ஆனால் முதல், உழைப்பு என்பவற்றை செலவழித்து இவ்நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளான எங்களுக்கு இவ்நெற் செய்கையில் எதுவித இலாபமும் இல்லை. என தமது கவலையை விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அரசாங்கமோ உத்தரவாத விலையை நிர்ணயித்து அதனை காலம் தாழ்த்தி நடைமுறைக்குக் கொண்டுவரும் போது இடைத்தரகர்கள் ஏதாவது ஏமாற்று வார்த்தைகள் பேசி விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்து போகின்றனர். அடுத்து விவாசாயிகள் நெற் செய்கைக்காகக் கடன் பெற்றிருப்பின் அக்கடனை உரிய காலத்தினுள் கட்ட வேண்டிய நிர்பந்தத்திற்குள்ளாவதால் இடைத்தரகர்கள் நிர்ணயிக்கும் விலைக்கே நெல்லை விற்பனை செய்கின்றார்கள்.

அரசாங்கம் நெல் கொள்வனவை நடைமுறைப்படுத்தும் காலத்தில் அனேக விவசாயிகளிடம் நெல் இருப்பதில்லை மாறாக இடைத்தரகர்களின் கைவசமே நெல் இருக்கும் இத்தகைய செயற்பாடுகளால் விவசாயிகளுக்கு நெற் செய்கையில் பாரிய நஷ்டம் ஏற்படுகின்றது என விவசாயிகள் தமது கவலையை வெளியிட்டுள்ளனர்.

**நலன் விரும்பி**

# நலன்புரி நிலைய மாணவர்கள் போக்குவரத்து செய்வதற்குரிய ஏற்பாடுகளை செய்துதாருங்கள்

கடந்த ஆண்டு (26.12.2004) ஏற்பட்ட கடல் பேரலையின் காரணமாகச் சொந்த இடங்களை இழந்து குடி நிலம், மண்டானை, குளணி, சாகாமம், திருக்கோவில் போன்ற பல அகதிமுகாம்களில் பல மாணவர்கள் வசித்து வருகின்றனர்.

இவ் அகதி முகாம்களில் வசித்து வருகின்ற மாணவர்களின் கல்வி நிலை வேதனைக் குரிய விடயமாக உள்ளது.

இவ் முகாம்களில் வசிக்கும் மாணவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர். அவ்வாறு அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளில் ஒன்று பாடசாலை செல்வதற்கான போக்குவரத்துப் பிரச்சினையாகும்.

அதாவது அகதி முகாம்களில் இருந்து பாடசாலைகள் வெகு தூரத்தில் அமைத்து இருப்பதனால் போக்குவரத்து வசதிகள் இல்லை.

இதனால் மாணவர்கள் நடந்தே செல்ல வேண்டிய நிலை உருவாகி உள்ளது, இதனால் மாணவர்கள் குறித்த நேரத்திற்குப் பாடசாலை செல்ல முடியாமலும், சில மாணவர்கள் வீதிகளில் மயக்கமுற்று விழுவதனையும் காண முடிகின்றது.

கற்றல் என்பது அமைதியான சூழல், தூய்மையான மனம் என்பவற்றின் அடிப்படையிலேயே கற்க வேண்டும். ஆனால் மாணவர்கள் இவ்வாறான நிலையில் அவர்கள் எவ்வாறு ஒழுங்காகக் கல்வியினை கற்பதென்பது புதிதாகவே உள்ளது.

எமது பிரதேசத்தினைக் கட்டி எழுப்பக் கூடிய எதிர் காலத் தூண்கள் இந்த மாணவர்கள் இவர்களது கல்வி இவ்வாறு கேள்விக் குறியாக உள்ளதை நாம் விரும்ப முடியுமா? எனவே இதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக விரைவில் முடிவு எடுத்து இவ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

**பு.சீலன், தம்பிலுவில்**

# திருக்கோவில் பிரதேசத்தில் சட்ட விரோத மின் பாவனை தடை செய்யப்பட வேண்டும்

திருக்கோவில் பிரதேசத்தில் சட்ட விரோதமான மின் பாவனையால் ஏற்பட்ட அசம்பாவிதச் சம்பவத்தால் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பினார். நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் திருட்டு மின்சாரம் பெற தொடுக்கப்பட்ட வயரில் ஏற்பட்ட மின் கசிவு அருகில் இருந்த இரும்பு வேலிக் கம்பம் மூலமாகக் கடத்தப்பட்டுள்ளது. ஆனால் இதனை அறிந்திருக்காத பயணி ஒருவர் தற்செயலாக இரும்பு வேலியைத் தொட்டதுதான் தாமதம். அவர் மின்சாரத்தாக்கத்தினால் தூக்கி எறியப்பட்டார்.

அதனைஅடுத்து இரும்பு வேலி கம்பத்தை பரிசோதித்த போது சட்டவிரோதமான முறையில் மின் சாரத்தைப் பெறுவதற்காக வேலி அமைக்கப்பட்டிந்த இரும்புக் கம்பத்தில் இணைக்கப்பட்டிருந்த வயறில் ஏற்பட்ட மின் கசிவே எனத் தெரியவந்தது. இச்சம்பவமானது திருக்கோவில் சகல கலை அம்மன் வீதியிலையே இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே மின்சார சபையினர் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுபவர்களுக்கெதிரான சட்ட நடவடிக்கையை எடுப்பதன் மூலமாகச் சட்ட விரோதமான மின் பாவனையாளர்களைக் கட்டுப் படுத்தலாம் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

**நலன் விரும்பி**

## சிந்தனைக்கு



நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம்., அதற்கு எமது வீரர்கள் இரத்தத்தைப் பாய்ச்சி வளர்க்கின்றோம். இந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

**தமிழீழத் தேசியத் தலைவர்**

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
மின்னஞ்சல் : batti@eezhanatham.com
தொலைபேசி : 065-2226110
23-02-2005

# ஆபத்தான கட்டத்தில் போர் நிறுத்த உடன்படிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை மூன்றாண்டுகள் நிறைவடைந்த நிலையில் இன்னும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அமுல்படுத்துவதில் ஆளும் தரப்பு அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருவது போர் நிறுத்தம் முறிவடைந்து விடுமோ என்ற அச்ச நிலையை தோற்றுவித்துள்ளது.

தமிழினம் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக சிங்களப் பேரினவாதிகளால் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இன்றும் ஏமாற்றும் தந்திரத்தையே ஆளும் தரப்பு மேற்கொள்ள முனைகின்றது என்பதை தற்போதைய சம்பவங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

சிங்களப் பேரினவாதம் தமிழினத்தின் உரிமைகளை வழங்க மறுதலித்த காலத்திலிருந்து உரிமைக்காக தமிழ் தலைவர்கள் சிங்களத் தலைமைகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் எல்லாம் ஈற்றில் கிழித்தெறியப்பட்ட வரலாறே காணப்படுகின்றது.

1957ம் ஆண்டு யூலை 26ம் திகதி இலங்கை பிரதமராக இருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும், எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை பண்டா செல்வா உடன்படிக்கையாகும்.

அக்கால கட்டத்தில் பௌத்த பிக்குகள், மற்றும் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் கடும் எதிர்ப்பினால் கிழித்தெறியப்பட்டது.

இதற்குப் பின்னர் 1965ம் ஆண்டு தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து, அதிகாரப் பரவலாக்கல், வடக்குக் கிழக்கில் குடியேற்றம் எனும் முக்கிய விடயங்கள் உள்ளடக்கிய டட்லி செல்வா ஒப்பந்தமும் பின்னர் பயனளிக்கவில்லை. இவ்வாறு சிறிலங்காத் தலைமைகள் தமிழினத்தின் உரிமைகளை வழங்க மறுதலித்ததுடன் ஏமாற்றப்பட்ட நிலையிலேயே தமிழினம் தமது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இருப்பினும் இந்திய இலங்கை ஒப்பந்தம் கடந்த 1987ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட போதும் தமிழினத்தின் உரிமைகளை வழங்கக் கூடிய எந்த அடிப்படை அம்சங்களையும் அது கொண்டிருக்கவில்லை. இந்திய-சிறிலங்கா அரசுகளின் சுயலாபத்தனங்களே காணப்பட்டது.

இவ்வாறு தமிழினம் பல உடன்படிக்கைகள் பேச்சுவார்த்தைகள் எல்லாம் நம்பிக்கையற்ற நிலையில் தமது தமிழின விடுதலைக்கான போர் முன்னெடுக்கப்பட்ட நிலையில் போர் நிறுத்த உடன்படிக்கை கடந்த 22. 02. 2002 அன்று கைச்சாத்திடப்பட்டது.

தமிழினத்தின் மீதான பார்வை சர்வதேச அரங்கில் பதிந்ததொரு நிலையில் சமாதானம் தேவை என்ற எதிர்பார்ப்பு பல்வேறு சமூகத்தினராலும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை இன்று கேள்விக் குறியோடு நிற்கின்றது.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியிலிருந்த கால் கட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களாலும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதில் ஆளும் தரப்பு பின்னடித்து வருகின்றது.

மாறாக படையினர் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணிகளை மேற்கொள்ளும் போராளிகள் மீது இலக்கு வைத்து தாக்குதல் நடத்துவது அவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவது, துன்புறுத்துவது போன்ற பல்வேறு நடவடிக்கைகளையும் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இவை தவிர பேரினவாத சக்திகளும் போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து உயிர் வாழ்வதற்கு தடையாக இருக்கின்றனர். இந்த உடன்படிக்கையை சாகடிப்பதற்கான பல்வேறு சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெரும் தன்மையான பொறுமை காத்தலால் அது தற்போது உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதானால் போர் நிறுத்தம் முறையாகப் பேணப்பட வேண்டும். எனவே தொடர்ந்து அதற்கு எவ்வித இடையூறுகளுமின்றி முன் கொண்டு செல்வதற்குரிய பங்களிப்பு ஆளும் தரப்பிடமே உள்ளது. எனவே போர் நிறுத்தம் பேரினவாதக் கெடுபிடி ஆத்திரமூட்டல்களால் கேள்விக்குறியாகியுள்ள நிலையில் அதனை முன்கொண்டு செல்ல வேண்டிய முக்கிய பொறுப்பு சிறிலங்கா அரசின் கைகளில்தான் உள்ளது.





போலந்து நாட்டு தன்னார்வத் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் நேற்று மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் அவர்களை கொக்கட்டிச்சோலை மாவட்டச் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடுவதை முதலாவது படத்திலும், மகிழடித்தீவுப் படுகொலை நினைவுத் தூபியைச் சென்று பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# சுமத்திரா தீவிலிருந்து காரைதீவுக்கு கரை சேர்ந்த குழந்தையின் வைத்திய அறிக்கை

(நமது நிருபர்)

ஆசிய நாடுகளை உலுக்கிய ஆழிப்பேரலை உருவான சுமாத்திரா தீவிலிருந்து குழந்தையொன்றின் வைத்திய அறிக்கையொன்று காரைதீவுக்கு வந்து சேர்ந்தது.

குழந்தையை இழந்த ஒருவர் கடலைப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்த போது இவ்வறிக்கை கரையொதுங்கியதாகக் கூறப்படுகின்றது. பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து இவ்வறிக்கை கடலில் பயணித்த போதும் எழுத்துகள் உருக்குலையவில்லை. ஆங்கில எழுத்துக்களால் விபரம் எழுதப்பட்டபோதும் ஆங்கில மொழியல்ல. மாறாக சுமத்திரா தீவுக்கான மொழியாக அது இருக்கக்கூடும். வயதை (Tahun) என்றும், (Bulan) என்றும் குழந்தை, சிறுவர் என்று பாகுபடுத்தி எழுதியுள்ளதைக் காணக்கூடியதாயுள்ளது. குழந்தையை Anak என்றும் Bawa lah என்றும் குறிப்படுவது போலுள்ளது. அவை பாஷை சம்பந்தமானதாகும். சுமார் 50 நாட்கள் கடலில் பயணித்து வந்த இந்த அட்டையைப் பலரும் பார்த்து வருகின்றனர். இதே போன்று இந்தோனேசியாவிலிருந்து பல பொருட்கள் கரை ஒதுங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை பிராந்திய அகதிகளுக்கு மலேசிய முதலமைச்சர் ஐயாயிரம் டொலர் அன்பளிப்பு

(காரைதீவு நிருபர்)

மலேசியா முதலமைச்சரும் உலக இஸ்லாமிய நிறுவனச் செயலாளருமான மொகமட் அலி பின் மொகமட் றுஸராம் அம்பாறைப் பிராந்திய அகதிகளுக்கென முதற்கட்டமாக 5000 அமெரிக்க டொலரை அமைச்சர் பேரியல் அஷ்ர.்பிடம் வழங்கினார்.

அமைச்சர் பேரியல் அஷ்ர.்.பின் அழைப்பின்பேரில் விஜயம் செய்த மலேசியா முதல்மைச்சருடன், மலேசியா தூதரக அதிகாரி நஷ்ரத் ஹுசைனும் சமூகமளித்திருந்தார்.

மருதமுனை அக்பர் கிராமம், கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளி, கல்முனை போன்ற பிரதேசங்களுக்கு இக்குழு அமைச்சருடன் விஜயம் செய்தது. குழுவினர் பாதிப்புக்களை நேரடியாகப் பார்வையிட்டு அகதிகள் தங்கியுள்ள முகாம்களுக்குச் சென்று விசாரித்தனர். அங்குள்ள உடனடி அவசியத் தேவைகள், பிரச்சினைகள் பற்றிக் கேட்டறிந்து கொண்டனர். அரசகாணி இல்லாமையினால் மீள் குடியேற்றத்திற்கான வீட்டுத் திட்டம் அமைப்பதிலுள்ள பிரச்சினைகள் பற்றி அமைச்சர் பேரியல் அஷ்ர.்ப் குழுவிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

சமையலுபகரணங்களைக் கொள்வனவு செய்யவே 5000 டொலர் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் ஒன்றை வழங்குமாறு பேரியல் அக்குழுவினரிடம் கேட்டுள்ளார்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் நவீன முறையில் உருவாக்கதிட்டம்

(விரி.சகாதேவராஜா)

இலங்கைத் தீவில் ஆழிப்பேரலை தாக்கி முற்றாக அழிந்த 176 பாடசாலைகளையும் நவீன முறையில் பலவசதிகளுடன் மீள உருவாக்க கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கான ஒப்பந்தங்கள் வெளியூர், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் செய்யப்பட்டு விட்டன. அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டன. 176 பாடசாலைகளும் ஆரம்பிப்பது தொடர்பாகநடவடிக்கை எடுக்கப்பட்டது.இதனிடையே ஆழிப்பேரலையால் அகதிகளான பலர் இன்றும் 279 பாடசாலைகளில் தங்கியுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே 455 பாடசாலைகள் இன்னும் பூரணமாக இயங்கத் தொடங்கவில்லையென்று கூறப்படுகின்றது. அழிந்த 176 பாடசாலைகளும் நாட்டிலுள்ள 12 மாவட்டங்களில் உள்ளன. அவை நவீனவசதிகளுடன் மீளக்கட்டியெழுப்பப்படவிருக்கின்றன.

விஞ்ஞான ஆய்வு கூடம், விவசாய, மனைப்பொருளியல் பல் ஊடகப் பிரிவுகள், கணனிக் கற்கை நிலையம், ஒன்று கூடல் மண்டபம், நிருவாக மண்டபம், அழகியற் கல்விப் பிரிவு, பவிலியன், நூலகம், புத்தகங்கள், அதிபர், ஆசிரியர் விடுதி, மின்சாரம், கழிவறைகள், நீர் போன்ற சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன..

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட காணிகளுக்கு நஷ்டஈடு வழங்கவும் கமநல அமைப்புக்கள் கோரிக்கை

(நமது நிருபர்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக பாதிக்கப்பட்ட நெற்காணிகளுக்கு நஷ்டஈடு வழங்குமாறு வவுணதீவு பிரதேச கம்நல அமைப்புக்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ச்சியாகப் பெய்த அடைமழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் பல ஆயிரக்கணக்கான பெரும்போக நெற்காணிகள் நீரில் மூழ்கியதால் விவசாயிகள் உரிய நேரத்திற்குகளைநாசினி, பசளை போன்றவை பாவிக்க முடியாமல் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

விதை நெல் ஒரு மூடை 2 ஆயிரம் ரூபாவிற்கு கொள்வனவு செய்து நெற் செய்கையில் ஈடுபட்ட வேளையிலே ஏற்பட்ட இந்தச் சம்பவம் நொந்து போயுள்ள ஏழை விவசாயிகளை மேலும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

அணை கடந்துவந்த வெள்ளம் அனைத்துப் பயிர்களையும் நாசம் செய்து விட்டன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு சிறந்த நடவடிக்கையினை மேற்கொண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நெற் காணிகள் அனைத்திற்கும் நஷ்டஈடு வழங்க ஆவன செய்யுமாறும் அக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூன்று சரத்துக்கள் அரசியல் அமைப்புக்கு உட்படவில்லை

(நமது நிருபர்)

இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மூன்று சரத்துக்கள் அரசியல் அமைப்புக்கு உட்படவில்லையென்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட சரத்துக்களுடன் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் என்று உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியதாக சபாநாயகர் டபிள்யூ.ஏ. எம்.லொக்குபண்டார குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் சட்ட மூலத்தை திருத்தங்களுடன் நிறைவேற்ற பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமில்லை என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாதம்
Eezhanatham
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்

**படையினரின்...**

இச்சந்திப்பு தொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு தமிழ்ச்செல்வன் பதிலளிக்கையில்:-

**கேள்வி.** மூன்றாண்டுகாலம் யுத்தநிறுத்தம் பேணப்பட்டுள்ளது இனிவரும் காலத்தில் சிக்கல்கள் வருமா?

**பதில்.** ஒரு சிக்கலான நிலைமைக்குத்தான் போர்நிறுத்த ஒப்பந்தம் தள்ளப்பட்டுள்ள சூழல் இருக்கின்றது.ஆயுதப்படைகளால் நடாத்தப்படுகின்ற யுத்தநிறுத்த மீறல்களின் உச்சக்கட்டமாக மட்டக்களப்பு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் அவருடன் இணைந்த போராளிகள், மாமனிதர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோரின் படுகொலைகள் அமைந்து விட்டன. இது மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளன. இதன் நெருக்கடியின் உச்சத்தை இன்றைய சந்திப்பில் விளக்கியுள்ளோம்.

**கேள்வி** .யுத்த நிறுத்தத்தை நல்லமுறையில் முன்னெடுத்துச் செல்ல யோசனைகள், ஆலோசனைகள் முன்வைத்துள்ளீர்களா?.

**பதில்.** புதிய யோசனைகள் ஒன்றும் சொல்ல வேண்டிய தேவையில்லை. இவ் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் சிறிலங்கா அரசு ஏற்றுக்கொண்டு கையொப்பம் இட்டுள்ளது. அந்த வகையில் இவ் யுத்த நிறுத்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளை பேணினாலே யுத்த நிறுத்த சூழலை ஒழுங்கான முறையில் பேணிக்கொள்ளலாம் .எங்கள் மக்களுக்கான இயல்பு வாழ்வை ஏற்படுத்துவது இராணுவ நெருக்கடிகளை குறைப்பது, மக்களின் மீள்குடியேற்றங்களுக்குவழிசெய்வது, இராணுவத்தோடு சேர்ந்து இயங்கும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு எங்கள் தாயக பிரதேசங்களில் இருந்து வெளியேற்றப்படுவது என்பதெல்லாம் இவ் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளன. அவற்றில் குறிப்பிட்டவற்றை நடை முறைப்படுத்தினால் யுத்த நிறுத்த த்தை பேணுகின்ற சாத்தியங்கள் நிறையவே உள்ளன. இன்று ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினை படைத்தரப்பு புதிதாக ஆயுதக்குழுக்களை உருவாக்கி படைத்தரப்புடன் இணைந்து விடுதலைப்புலிகள் அமைப்பின் மீதும் தேசப்பற்றாளர்கள் மீதும் மக்கள் மீதும் ஒரு மறைமுகயுத்தத்தை தொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மறைமுகயுத்தம் தொடருமானால் இவ் அமைதிச் சூழல், யுத்த நிறுத்த சூழல் எல்லாமே தகர்த்தெறியப்பட்டு விடும் என்ற ஆபத்தை இன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

**கேள்வி.** யுத்த நிறுத்தம் ஏற்பட்டு மூன்றாண்டுகளில் மக்கள் போராட்டம் எல்லாம் நிகழ்ந்துள்ளது இனிவரும் நாட்களில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை எந்த வழியில் முன்னெடுத்துச் செல்லப் போகின்றீர்கள்?

**பதில** .விடுத்லைப்புலிகளைப் பொறுத்தவரை மிக உச்சக் கட்ட பொறுமையினை கடைப்பிடித்து வருகின்றார்கள். தலைமைப் பீடத்தைப் பொறுத்தவரை எந்தளவு யுத்தநிறுத்த மீறல்கள்,படுகொலைகள், சீண்டிவிடும் செயல்கள் இடம் பெற்ற நிலையிலும் பொறுமை காத்து முடிந்தளவு சர்வதேச சமூகத்தின் ஆதரவோடும் சமாதான முயற்சிகளில் முழு அர்ப்பணிப்போடு ஈடுபட்டு வருகிறார்கள் என்பது யதார்த்தம். விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரையிலும் மக்களைப் பொறுத்த வரையிலும் எங்கள் தலைமைப்பீடத்தைப் பொறுத்தவரையிலும் முடிந்தளவு அர்ப்பணிப்போடு எங்கள் பொறுமையை உச்ச அளவில் வெளிப்படுத்தியுள்ளோம்.

தொடர்ந்தும் இப்பொறுமையின் எல்லை இருக்கும் என்பதை உறுதி செய்ய முடியாது. எமது பொறுமையை, அர்பணிப்பை சீர்குலைக்கும் வகையில் தற்போது உள்ள நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

ஆகவே, போர்நிறுத்தம் மூன்று ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இந்த நாளில் எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாடாக யுத்தநிறுத்தத்தை உடனடியாக கவனத்திலெடுத்து விரைவில் நடைமுறைக்கு வருவதன் ஊடாக நெருக்கடி நிலைமைகளில் இருந்து மீளும் வாய்ப்பு உள்ளது. என்பதை நாம் தெளிவுபடுத்தியுள்ளோம்.

**கேள்வி-** போர்நிறுத்த உடன்பாடு கடந்த காலங்களில் பல ஆபத்தான கட்டங்களை எட்டியுள்ளது. இனிவரும் நாட்களில் இந்தப் போர்நிறுத்த உடன்பாடு எவ்வாறு இருக்கப்போகின்றது?

**பதில்-** போர்நிறுத்த உடன்பாடு பல ஆபத்தான கட்டங்களை தாண்டி இன்று மிக உச்சக் கட்டங்களை நெருங்கியுள்ளது. என்பதைத்தான் வலியுறுத்தியுள்ளோம். எதிர் காலத்தில் என்ன நடைபெறும் என்பதை வைத்துக்கொண்டுதான் முடிவுகள் அமையும் என்பதை கூற முடியும்.

**கேள்வி-** இனிவரும் நாட்களில் சாமாதான முயற்சிகளில் சர்வதேச சமூகம் ஊடாக புதிய யுத்திகள் எவையும் கையாளப்படுமா?

**பதில்-** தொடர்ந்து சர்வதேச சமூகத்திற்கு எமது நிலைப்பாட்டை தெளிவாக்கி வருகிறோம். எதிர் காலத்திலும் சர்வதேச சமூகத்தின் சமாதான முயற்சிகள் தொடர்பில் அழுத்தங்களை பிரயோகிக்கவுள்ளோம். ஏனெனில் தமிழ்மக்களோ எமது தலைமைப்பீடமோ தொடர்ந்து பொறுமைகாத்துக் கொண்டு இருக்கமுடியாது. சிறிலங்கா அரசு மறைமுகப் போரை எம்மீது திணித்துக்கொண்டு இருக்கும் சூழலில் தொடர்ந்து அமைதி காத்துக் கொண்டு இருக்க முடியாது. இந்த சூழலை இன்னும் ஆணித்தரமாகவும் உறுதியாகவும் வளர்க்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது அத்தை நாம் பேணுவதற்கான தொடர் முயற்சியாக இருக்கப் போகின்றது

**கேள்வி-** சுனாமி பொதுக் கட்டமைப்பு நிலைமைகள் எப்படியுள்ளன?

**பதில்-** பொதுக் கட்டமைப்பு மாற்றம் தொடர்பாகவும் எமது நிலைப்பாட்டை இன்று தெரிவித்திருக்கிறோம் சுனாமி அழிவுகள்ஏற்பட்டு ஒன்றரை மாதங்கள் கடந்த நிலையில் சர்வதேச உதவிகள் எமது மக்களை வந்து சேராத நிலைதான் காணப்படுகின்றன. இது பெரும் அழிவுகளை சந்தித்து மனிதா பிமான உதவிகளை எதிர்பார்த்து நிற்கும் எமது மக்கள் மத்தியில் பெரும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. எதற்கும் விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் நோர்வே அனுசரணையாளர்களும் சர்வதேச சமூகமும் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம். நோர்வே அனுசரணையாளர்கள் கூடுதல் கவனம் எடுப்பதாக கூறியுள்ளனர்.

**கேள்வி-** சர்வதேச நாடுகளுக்கு பயணம் செய்யவுள்ளீர்களா?

**பதில்-** விரைவில் சர்வதேச சமூகத்துடன் உரையாடவேண்டிய தேவையுள்ளது மக்களின் மனிதாபிமான தேவைகள், பிரச்சினைகள் இங்குள்ள சூழ்நிலைகள் தொடர்பாக குறிப்பாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சர்வதேச உதவிகளை பெற்றுக் கொள்ளும் முயற்சிகளில் நாங்கள் ஈடுபடவுள்ளோம் அதற்கான திட்டம் எங்களிடம் உள்ளன.

**கேள்வி-**தென்தமிழீழ பயணம் தொடர்பாக ?

**பதில்-**தென்தமிழீழத்திற்கான பயணம் நல்ல முறையில் அமைந்தது குறிப்பாக தமிழீழத் தேசியத்தலைவரின் விசேட பணிப்புக்கு அமைவாகத்தான் நாம் தென்தமிழீழத்திற்குச் சென்றோம். எங்களுடைய கௌசல்யனின் இழப்பும், படுகொலையால் ஏற்பட்ட கொந்தளிப்பு நிலைமையை தீர்ப்பதும், மக்களுக்கு ஆறுதல் கூறுவதும் சுனாமியால் ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களுக்கு தீர்வு காணக்கூடிய முயற்சிகளில் ஈடுபட வேண்டிய தேவையுமாயிருந்தன. புதிய நிர்வாகங்களை ஒழுங்குபடுத்த வேண்டியிருந்தது அந்த வகையில் தென்தமிழீழ பயணம் அமைந்துள்ளது மக் களை சந்தித்து கலந்துரையாடி ஆறுதல் கூறினோம். அத்துடன் முஸ்லிம் களை சந்தித்து கலந்துரையாடி பிரச்சினைகளை எமது தலைமைப்பீடத்திற்கு தெரியப்படுத்தக்கூடிய கலந்துரையாடல்களை நடத்தினோம்.

**கேள்வி.** மூன்று ஆண்டு கால யுத்த நிறுத்தம் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எந்த அளவு சாதகமான நிலையை உருவாக்கியுள்ளன அப்படி இல்லை எனில் எவ்வளவு காலத்துக்கு யுத்த நிறுத்தத்ததைப் பேணவுள்ளீர்கள்?

**பதில்.** யுத்த நிறுத்த உடன்படிக்கையின் புலிகளுக்கு சாதகமான நிலமை உருவாக்கி அமைக்கப்படவில்லை இது போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் இயல்பு நிலமையை உருவாக்கவும் விடுதலை பெறவுமே போர்நிறுத்த உடன்பாடு உருவாக்கப்பட்டது ஆகவே எமது மக்கள் யுத்தத்தால் இடம்பெயர்ந்து பெரும் அவலங்களை சந்தித்து நிற்கும் நிலையில் இயல்பு வாழ்வை போர் நிறுத்த உடன்பாடு மக்களுக்கு ஏற்படுத்தவில்லை. இது மூன்று ஆண்டு காலத்தில் யுத்த நிறுத்த உடன்பாட்டின் பின்னடைவாக,கருதுகிறோம் மக்கள் மத்தியிலும் விரக்தியும் வெறுப்பு நம்பிக்கையீனமும் ஏற்பட்டுள்ளன கடந்த காலத்தில் இலங்கைப் படைகள் ஆயுதக்குழுக்களை வைத்துக் கொண்டு மக்கள் மீது மறைமுக யுத்தத்தை மேற்தொண்டு வந்ததன் யதார்த்தத்தின் மூலம் நாம் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி நாம் படைத்தரப்புடன் இயங்கும் ஆயுதக்குழுக்கள் எங்களுடைய தாயகப் பிரதேசத்தில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்பது யுத்த நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம் புதிய அரசாங்கம் பதிவியேற்ற பிறகு புது ஆயுதக்குழுக்கள் உருவாக்கப்பட்டு படைத்தரப்புடன் இணைந்து மறைமுக யுத்தத்தை தொடுத்துவருகிறார்கள் இது யுத்த நிறுத்தத்தை கேள்வி குறியாக்கியுள்ளன இந்த யுத்த நிறுத்தத்தை அரசும் படைகளும் உரிய முறையில் கடைப்பிடிக்காமல் விட்டால் ஆபத்தான கட்டத்தை போர்நிறுத்த உடன்பாடு எட்டும் நிலை உருவாகும்

**கேள்வி-** படுகொலைகளை கண்டித்து அரசு அறிக்கை விட்டுள்ளது தொடர்பாக?

**பதில்-**கௌசல்யனின் படுகொலையினைக் கண்டித்து அரசு அறிக்கை விட்டிருப்பது நகைப்புக்குரியது. ஏனெனில் இலங்கைப் படைத்தரப்பினுடைய முழு ஆதரவுடன்தான் படுகொலை முயற்சி இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. இப்படுகொலைகளுக்கு முழுப்பொறுப்பு எடுக்கவேண்டியது இலங்கை அரசும் படைகளும்தான். ஆகவே இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளில் படுகொலைகளை செய்த பின்னர் ஆயுதக்குழுக்களில் பழிகளை சுமத்திவிட்டு அறிக்கை விடுவதில் அர்த்தமில்லை. தென் தமிழீழத்தின் பல பிரதேசங்களில் படைத்தரப்பு கூட்டுப்படைகளையும் தேசத்துரோகிகளையும் வைத்துக் கொண்டு செயற்படுவது மக்களுக்கு தெரிந்த உண்மையாகும் படைத்தரப்பும் ஆயுதக்குழுக்களும் இணைந்து தான் இப் படுகொலைகளை செய்துள்ளனர். என்பதை நாம் நோர்வே அனுசர ணையாளர்களிடம் தெரியப்படுத்தியுள்ளோம். படைத்தர ப்பினால் படுகொலைகளை, ஆயுதக்கு ழுக்களை கட்டுப்படுத்த முடியாது விட்டால் எங்கள் பகுதிகளிருந்து படைகள் வெளியேறி எமது மக்களை நிம்மதியாக வாழ விடவேண்டும். யுத்த நிறுத்தத்திற்கு மாறாக படுகொலைகள் இடம்பெறுகின்றன. அமைதிச் சூழலை குழப்பும் நோக்கத்தோடுதான் அரச படைகள் செயற்படுகின்றனவோ. என்ற சந்தேகம் அனைத்து மக்களையும் எங்களையும் சிந்திக்க தூண்டியுள்ளது அத்தோடு ஐக்கிய நாடுகள் செயலாளரின் கண்டனத்திற்கு அரசு கண்டனம் தெரிவிக்கும் நிலை ஊடாக படுகொலைகளின் பின்னனியில் யார் உள்ளனர் என்பது மக்களுக்கு விளங்கியுள்ளது.

**சுனாமி...**

சிகிச்சை முகாம் நடாத்தப்படாத காரணத்தால் இம்முகாம் நடாத்தப்படுவதாக நகர லயன்ஸ் கழகத் தலைவர் எஸ்.சிவகணேசன் தெரிவித்தார். இதேவேளையில் நேற்று மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் அமெரிக்க கலிபோர்னிய வைத்திய நிபுணர்களால் வைத்திய முகாம் முகாம் நடாத்தப்பட்டது.

# போர் நிறுத்தத்தை தொடர்ந்து பேணி இரு தரப்பும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

## கண்காணிப்புக்குழுவின் பதில் தலைவர் ஹொக்லன்ட்

(நமது நிருபர்)

போர்நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்துள்ள இந்த மூன்று வருட காலத்திற்குள் சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் போர்நிறுத்த மீறல்கள் தொடர்பாக மாறி மாறி குற்றச்சாட்டுக்களை சுமர்த்தினாலும் இருதரப்பினரும் அதனைப் பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவது வரவேற்கத்தக்கது என இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவர் ஹக்ரொப் ஹொக்லன்ட் தெரிவித்துள்ளார்.

அன்று சிறிலங்கா பிரதமராகயிருந்த ரணில் விக்கிரமசிங்கவிற்கும் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குமிடையில் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையின் மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது.

18 ஆம் திகதி செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி இரு தரப்பினருக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு 21 ஏப்ரல் 2003 ஆம் ஆண்டு ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தையுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள தன்னாட்சியுள்ள இடைக்கால நிர்வாக யோசனையை சிறிலங்கா அரசு இதுவரை ஏற்காத காரணத்தினாலேயே இந்த நிலை ஏற்பட்டது.

போர்நிறுத்த உடன்படிக்கை மூன்று வருடங்கள் பூர்த்தியாடைந்தமை குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள ஹக்ரொப் ஹொக்லன்ட், உடன்படிக்கை அமுலுக்கு வந்த் பின்பு இரு தரப்பினருக்குமிடையில் மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை. இருப்பினும் நடைபெற்று வரும் ஆட்கொலைகள் உடன்படிக்கைக்கு பாரிய அச்சுறுத்தலாக இருப்பதால் இது கண்டிக்கப்பட வேண்டும். இதனால் பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகியுள்ளது என்றார்.

**போர்...**

இவ் எதிர்ப்பு போராட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து கொள்ளவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

**நள்ளிரவில்...**

தொடர்பாக .போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் மனுவொன்றைக் கையளிக்கவுள்ளனர்.

அண்மைக்காலமாக அம்பாறை மாவட்டத்தின் திருக்கோயில் பிரதேச நலன்புரி நிலையங்களில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் பெண்களை துன்புறுத்தி வருவது தொடர்பாக அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**புலிகளை...**

மக்களின் அனைத்து தேவைகளையும் செய்து கொடுக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டு இருந்தது. ஆனால் மூன்று வருடமாகியும் எவ்வித தேவைகளும் செய்து தரப்படவில்லை. எமது மக்கள் எதனை சிறிலங்கா அரசிடம் பெறுவதாக இருந்தாலும் பலத்த போராட்டத்தின் மத்தியிலேயே பெறவேண்டி உள்ளது.

உதாரணமாக ஒரு வீதியை திறப்பதாக அல்லது ஒரு பாடசாலையை இராணுவ எல்லைக்குள் இருந்து வெளியேற்றி பாடசாலையை திறப்பதாக இருந்தால் பல நாட்களாக எங்களது மக்கள் அகிம்சை போராட்டத்தினை நடாத்தியே திறக்க வேண்டி உள்ளது. எனவே இந்த சிறிலங்கா அரசு எம்மை மீண்டும் ஓர் போர்முனைக்கு தள்ளிவருவதாக அரசினதும் சிங்களப் பேரினவாத சக்திகளினதும் செயற்பாடு அமைகின்றது என்று கூறினார்.

**போலந்து...**

வேளை மகிழடித்தீவு படு கொலை நினைவுத்தூபியையும் பார்வையிட்டனர்.

**எரிக்...**

னால் ஏற்பட்ட அழிவுகளைப் பார்வையிடுவதற்காக இவர் அங்கு செல்லவுள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு கொழும்பு சென்றடைந்த எரிக்சொல்ஹெய்ம் நேற்று கிளிநொச்சி சென்றார். விடுதலைப்புலிகளின் அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்து இவர் இன்று சிறி லங்கா ஜனாதிபதி, பிரதமர், எதிர்க் கட்சித் தலைவர் உட்பட பலரையும் சந்திப்பார்.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தால் 23.02.2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.